பக்கங்கள்:-22

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | கார்த்திகை 09 | ஞாயிற்றுக்கிழமை | 24.11.2024 | அதிர்வு 114

## வடக்கு மாகாண அமைச்சின் செயலர் ஒருவர் இடைநிறுத்தம்

### ஆளுநர் அதிரடி நடவடிக்கை

வடக்குமாகாணஅமைச்சின்செயலாளர் ஒருவரின் பதவியை ஆளுநர் நா.வேதநாயகன் மீளப்பெற்றுள்ளார்.

உடனடியாகநடைமுறைக்குவரும்வகையில், வடக்கு மாகாண விவசாய 05

# நல்லூரில் மாவீரர் நினைவாலயம் அங்குரார்ப்பணம்





(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், நல்லூரில் உள்ள தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபிக்கு முன்பாக உள்ள பகுதிகளில் மாவீரர்களின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்கள் மக்கள் 07





# எம் மாவீரர்களின் தியாகம் ஒருபோதும் வீண்போகாது!

## தமிழரசின் எம்.பி. சிறீதரன் தெரிவிப்பு



**“எமது மண்ணையும், மக்களையும் ஆழமாக நேசித்து, இன விடுதலை என்ற சத்திய இலட்சியத்துக்காகத் தம் உயிர்களை அர்ப்பணம் செய்த எமது தேசத்தின் வீர மறவர்களது தியாகம் ஒருபோதும் வீண்போகாது. மாவீரர்களின் உயிர்க்கொடைக்கான விலையை, காலம் எங்கள் கரங்களில் ஒருநாள் கையளித்தேயாகும்.”**

**- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.** 06




நேற்று நண்பகல் தென்னிலங்கைக் கட்சி ஒன்றின் யாழ். அமைப்பாளர் யாழ் நகரில் ஓர் உணவு விடுதியில் மதியபோசனம் எடுக்கச் சென்றிருந்தபோது, அங்கு எதிர்பாராத விதமாக சுமந்திரனைச் சந்தித்தார்.

இருவரும் ஒரு மேசையிலிருந்து உரையாடிக் கொண்டிருந்தனர். அப்போது திடீரென சுமந்திரனின் கைத்தொலைபேசிக்கு ஓர் அழைப்பு வந்தது. அழைப்பில் வந்தவர் நாட்டின் ஜனாதிபதி.

“மிக முக்கியமான சமயத்தில் நாடாளுமன்றத்தில் இருக்க வேண்டியவர்கள் நாடாளுமன்றத்தில் இல்லையே...!” – என்று எடுத்த எடுப்பில் விசனம் தெரிவித்தார் நாட்டின் தலைவர்.

தமிழர் தரப்பில் சுமந்திரன், பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தரப்பில் எரான் விக்ரமரத்ன போன்றோர் இல்லாதமை அவருக்கு எரிச்சலை தந்திருக்கும் போல.

“ஆம். அதற்கு என்ன செய்வது? மக்களின் தெரிவு – முடிவு – அது என்றால் நாங்கள் என்ன செய்ய முடியும்?” – என்றார் சுமந்திரன். 05









# உதயநகரில் மாவீரர்களின் பெற்றோர், உரித்துடையோர் கௌரவிப்பு

கிளிநொச்சி – உதயநகர் வட்டாரத்தில் ஒழுங்கமைக்கப்பட்ட மாவீரர்களின் பெற்றோர் மற்றும் உரித்துடையோரை மதிப்பளிக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

இதில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனும் கலந்துகொண்டு மாவீரர்களின் பெற்றோர் மற்றும் உரித்துடையோரை மதிப்பளித்து உரையாற்றினார்.
















# 5 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாயம்



5 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டிருந்த மண்சரிவு அபாய எச்சரிக்கை இன்று பிற்பகல் 4 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளதாகத் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன்படி பதுளை, கேகாலை, காலி, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கே இவ்வாறு மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது.

# 120,961 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்தனர்



இந்த மாதத்தின் முதல் 20 நாள்களில் 120,961 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகைத்தந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்தியாவிலிருந்தே அதிகளவான சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர். அந்த எண்ணிக்கை 26,717 ஆகும்.

அதன்படி, இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் நாட்டுக்கு வருகைதந்துள்ள சுற்றுலாப் பயணிகளின் மொத்த எண்ணிக்கை 17 லட்சத்து 41 ஆயிரத்து 676 ஆகும்.

இந்தநிலையில், கடந்த வருடம் இலங்கை வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் மொத்த எண்ணிக்கை 14 லட்சத்து 87 ஆயிரத்து 303 என சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

# கட்சிக்குள் எந்தவித நெருக்கடியும் இல்லை

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு




தேசியப்பட்டியல் நியமனம் தொடர்பில் கட்சிக்குள் எந்த வித நெருக்கடியும் இல்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போது இதனைத் தெரிவித்த அவர், தேசிய பட்டியல் நியமனம் தொடர்பில் விரைவில் அறிவிக்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தேசிய பட்டியலுக்காக தற்போது பரிந்துரைக்கப்பட்டுள்ளவர்கள் அனைவரும் மிகவும் பொருத்தமானவர்கள்.

நாட்டை கட்டியெழுப்புவதில் அவர்கள் அனைவருக்கும் பெரும் பொறுப்பு இருக்க வேண்டும். இந்த பட்டியலில் மிகவும் அனுபவம் வாய்ந்தவர்கள் உள்ளனர்.

வீழ்ச்சி கண்டுள்ள நாட்டையும் 220 லட்சம் மக்களையும் மீட்டெடுப்பதே எனது எண்ணப்பாடாக இருக்கிறது.

நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் நடத்தைகுறித்து நாட்டு மக்களே ஒரு முடிவுக்கு வர வேண்டும்.

எவ்வாறாயினும், நாடாளுமன்ற நிலையியற் கட்டளைக்கு ஏற்ப அனைத்து உறுப்பினர்களும் செயற்பட வேண்டும்."- என்றார்.





# இராமநாதன் அர்ச்சுனாவுக்கு எதிராக சி.ஐ.டியில் மற்றுமொரு முறைப்பாடு

யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனாவுக்கு எதிராகக் குற்றப் புலனாய்வு திணைக்களம் மற்றும் பொலிஸ் தலைமையகத்தில் நேற்றும் பல முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

10 ஆவது நாடாளுமன்றத்தின் கன்னி அமர்வின் போது நாடாளுமன்ற மரபுகளுக்கு எதிராக நாடாளுமன்ற உறுப்பினர் ராமநாதன் அர்ச்சுனா எதிர்க்கட்சித் தலைவர் ஆசனத்தில் அமர்ந்திருந்த சம்பவம் சமூகத்தில் பலராலும் விமர்சிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கன்னி அமர்வின் பின்னர் அவர் சமூக ஊடகங்களில் பல்வேறு காணொலிகளைப் பதிவிட்டிருந்தார், அவற்றில் சில காணொலிகள் தற்போது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளன.

இந்நிலையில், அவருக்கு எதிராக சுவர்ணபூமி தேசிய இயக்கம் பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு செய்துள்ளது.

வைத்தியர் ராமநாதன் அர்ச்சுனா பிரிவினைவாதக் கருத்துக்களை முன்வைத்து வருகின்றார் என சுவர்ணபூமி தேசிய இயக்கத்தின் தலைவர் அசங்க ருவன் பொதுப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

குறித்த முறைப்பாட்டைப் பதிவு செய்ததன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, அவரை நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து நீக்குவதற்கு ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வர வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அதேநேரம், சமூக செயற்பாட்டாளர்களான பாலித்த லக்ஷ்மன், சிவில் சமூக செயற்பாட்டாளர் குணரத்ன அதிகாரி மற்றும் சமூக செயற்பாட்டாளர் நாமல் குமார உள்ளிட்டோரும் நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் ராமநாதன் அர்ச்சுனாவுக்கு எதிராக முறைப்பாடுகளை முன்வைத்துள்ளனர்.

இதேவேளை, நாடாளுமன்ற சம்பிரதாயத்திற்கு ஏற்ற வகையில் உறுப்பினர்கள் நடந்து கொள்ள வேண்டும் என கெஃபே எனப்படும் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கத்தின் நிறைவேற்று பணிப்பாளர் மனாஸ் மக்கின் தெரிவித்துள்ளார்.

# தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி



தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகியுள்ளது.

அது மேற்கு, வடமேற்கு திசையில் நகர்ந்து நாளை தென்மேற்கு வங்காள விரிகுடாவில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற வாய்ப்புள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது மேலும் வலுவடைந்து இலங்கையின் வடக்கு கரையோரத்தை நோக்கி நகரக்கூடும் என எதிர்வு கூறியுள்ள அந்த திணைக்களம், நாட்டினுள்ளும் நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளுக்கும் 'சிவப்பு' வானிலை எச்சரிக்கையை விடுத்துள்ளது.

மன்னாரிலிருந்து காங்கேசன்துறை, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் பொத்துவில் ஊடாக ஹம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகளில் காற்றானது இடைக்கிடையே மணித்தியாலத்துக்கு 60 முதல் 70 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் வீசக்கூடும்.

அதேநேரம், இன்று முதல் மறு அறிவித்தல் வரை மன்னாரிலிருந்து காங்கேசன்துறை, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் பொத்துவில் ஊடாக ஹம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகளில் கடற்றொழில் செயற்பாடுகளைத் தவிர்க்குமாறு கடற்படை மற்றும் மீனவ சமூகங்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இன்று முதல் எதிர்வரும் 26 ஆம் திகதி வரையில் ஏற்படவிருக்கும் சீரற்ற காலநிலை தொடர்பில் அவதானமாக இருக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் பொதுமக்களைக் கோரியுள்ளது.

# முட்டையின் விலை மீண்டும் அதிகரிப்பு



தற்போது சந்தையில் முட்டையின் விலை மீண்டும் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த நாள்களில் 35 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை தற்போது சந்தையில் வெவ்வேறு விலைகளில் விற்பனை செய்யப்படுகின்றது.

சிறிய அளவிலான முட்டை 38 ரூபாவுக்கும், சாதாரண முட்டை 40 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகிறது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"மிக முக்கியமான தருணத்தில் தேவையானவர்களை நாடாளுமன்றுக்கு நீங்கள் அனுப்பாமல் பிரயோசனமற்றவர்களை அனுப்பி கொண்டிருக்கின்றீர்களே...!" என்றார் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க.

"இது அரசமைப்பு உருவாக்க வேளை. உங்கள் பிரசன்னம் - பங்களிப்பு - மிக மிக அவசியம். கட்டாயம்." - என்றார் ஜனாதிபதி.

"உண்மைதான். எனக்கும் அது புரிகின்றது. ஆனால் அதற்கு எம்.பியாக இருந்துதான் பங்களிக்க வேண்டும் என்பதல்ல என்று நீங்கள்தானே அண்மையில் கூட கூறியிருந்தீர்களே..." - என்று நினைவூட்டினார் சுமந்திரன்.

"ஆமாம். உங்கள் பங்களிப்பு - ஒத்தாசை - கட்டாயம் வேண்டும். அது தவிர்க்க முடியாதது. எப்படி என்பதை நான் உங்களுடன் விரிவாகப் பேசுகிறேன்..." என்ற சாரப்பட பதிலளித்தார் ஜனாதிபதி.

வேறு ஓரிரு விடயங்கள் குறித்தும் ஜனாதிபதி சுமந்திரனுடன் பேசினார். தென்னிலங்கை கட்சியின் யாழ். அமைப்பாளர் புன்முறுவல் பூத்தபடி அந்த தொலைபேசி உரையாடலில் சுமந்திரனின் பக்கத்துப் பேச்சை செவிமடுத்து கொண்டிருந்தார்.

அது முடிந்ததும், "இன்னும் நீங்கள்தான் அவருக்கு (ஜனாதிபதிக்கு) ஆலோசகர் போல... உங்களிடம் கலந்தாலோசித்தான் எல்லா விடயங்களையும் அவர் கையாளுகின்றார் போலும். அதனை நேரில் அவதானிக்கும் சந்தர்ப்பம் எனக்கு இன்று கிட்டியது." - என்றார்.

அதைக் கேட்டு பதில் கூறாமல் சிரித்தார் சுமந்திரன்.

இது முடிந்து சற்று நேரத்தில், அந்தத் தென்னிலங்கைக் கட்சியின் வடக்கு அமைப்பாளருக்கு தொலைபேசி அழைப்பு எடுத்தேன் நான். ஒரு கப்ஸா விட்டேன்.

"சற்று முன்னர் ஜனாதிபதியின் இரகசிய சேவையுடன் பேசினேன். ஜனாதிபதி சுமந்திரனுடன் தொலைபேசியில் உரையாடிய சமயம் நீங்கள் சுமந்திரனுக்கு அருகில் இருந்தீர்கள் என்று அவர்களின் அறிக்கை கூறுகின்றது...!" - என நான் கயிறு விட்டேன்.

அவர் கெக்கட்டம் விட்டுச் சிரித்தார். "உங்களின் இன்டெலிஜென்ட் 'நெட்வேர்க்' நல்ல வேகமாகவும் ஜரூராகவும் வேலை செய்கின்றது" - என்று சான்றிதழ் தந்தார் அவர்.

\+ \+ \+

இலங்கைத் தமிழரசு கட்சியின் நாடாளுமன்றக் குழுவின் பேச்சாளராகவே சிறிநேசன் எம்.பி. தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளராக அல்லர் என்ற விடயத்தை நேற்று முன்தினம் என் பத்தியில் கோடி காட்டியிருந்தேன்.

தமிழரசுக் கட்சியின் சில பிரமுகர்கள், ஆதரவாளர்கள் எனக்கு அழைப்பு எடுத்தனர். இதுவரை காலமும் தமிழரசு கட்சியின் நாடாளுமன்ற குழுவின் பேச்சாளராகச் செயற்பட்ட எம்.ஏ.சுமந்திரன், தம்மைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளராக வெளிப்படுத்திய போது உங்கள் கவனம் எங்கே போயிருந்தது என்ற சாரப்பட என் மேல் சீறி விழுந்தனர்.

இது தொடர்பில் அவர்களுக்காகவும், வாசகர்களுக்காகவும் எனக்கு நினைவில் நின்ற விடயங்களை மீள இங்கு நினைவூட்டுவது பொருத்தம் என்று நினைக்கிறேன்.

2010 - 2015 காலப்பகுதியில் இலங்கைத்தமிழரசுக்கட்சியையும் உள்ளடக்கிய நாடாளுமன்றக் குழுவின் பேச்சாளராக ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் விளங்கினார். அவரது வெளிப்படையான சில கருத்து வெளிப்பாடுகள் கூட்டமைப்புக்குள் - குறிப்பாக தமிழரசு கட்சியினருக்கு - நெருடலானவையாகவும், அதிருப்தி தருபவையாகவும் இருந்தன.

இந்தச் சூழ்நிலையில்தான் வவுனியாவில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் 2014 ஆம் ஆண்டின் தேசிய மாநாட்டின் பின்னரான மத்திய குழுக் கூட்டத்தில் தமிழரசுப் பேச்சாளராக சுமந்திரன் செயற்படுவார் என்ற அறிவிப்பை கட்சியின் (அப்போதைய) புதிய தலைவரான மாவை சேனாதிராஜா விடுத்தார்.

அதன் பின்னர் 2019 இல், யாழ்ப்பாணத்தில் நடந்த தேசிய மாநாட்டை ஒட்டிய கூட்டத்தில் சுமந்திரன் கட்சியின் பேச்சாளராக மீண்டும் அறிவிக்கப்பட்டார். அது கட்சியின் கூட்ட அறிக்கை பதிவுகளில் இருக்கின்றது. கட்சியின் நிர்வாகச் செயலாளர் குலநாயகம் நேற்று அதனை உறுதிப்படுத்தினார்.

இவ்விடயம் குறித்து கட்சியின் கூட்டம் ஒன்றில், குறிப்பிட்ட ஒரு பிரமுகர் கேள்வி எழுப்பியமையையும், அதனை அடுத்து கூட்டத் தீர்மானப் பதிவு அடங்கிய அறிக்கைப் புத்தகம் வாசித்துக் காட்டப்பட்டது என்ற விடயத்தையும் அவர் நினைவூட்டினார்.

இவற்றையெல்லாம் மறந்துவிட்டு, சில தரப்பினர் இப்போது என் மீது வந்து பாய்வதில் அர்த்தமில்லை.

சரி, அவர்கள் கூறுவது போல தமிழரசுக் கட்சியின் பேச்சாளராக சுமந்திரன் தெரிவு செய்யப்படவில்லை எனில், கட்சியின் பேச்சாளர் அவர் என்று ஊடகங்கள் இதுவரை காலமும் செய்தி வெளியிட்டுக் கொண்டிருந்த போது இவர்கள் என்ன செய்து கொண்டு இருந்தார்கள்? அதை ஏன் தவறு என சுட்டிக்காட்டிக் கேள்வி கேட்கவில்லை? எனக்குப் புரியவில்லை.

2015 முதல் 2020 வரை தமிழ் கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுவின் பேச்சாளராகவும் சுமந்திரனே விளங்கினார்.

2020 நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவராக சம்பந்தன் மீளவும் தெரிவு செய்யப்பட்ட கூட்டத்தில், நாடாளுமன்றக் குழுவின் பேச்சாளர் தெரிவு குறித்தும் அடுத்துப் பிரஸ்தாபிக்கப்பட்டது.

ஒரு தரப்பு செல்வம் அடைக்கலநாதனின் பெயரைப் பிரேரிக்க சிறிதரனின் பெயரை சுமந்திரன் பிரேரித்தார். தமிழரசுக் கட்சிக்கு வெளியே அது போவதற்கு தமிழரசுக் கட்சி எம்.பிக்கள் இணங்காதமையால் அந்தத் தெரிவு விடயம் தீர்மானிக்கப்படாமல் தள்ளிப் போடப்பட்டது. நாடாளுமன்றக் குழுப் பேச்சாளர் பதவியில் 2024 வரை சுமந்திரனே நீடித்தார்.

அச்சமயத்தில் நான் அப்போது பணியாற்றிய ஊடகத்தின் செய்தியாளர் ஒருவரும், கொழும்பு தொலைக்காட்சி நிறுவன ஊடகவியலாளர் ஒருவரும், இரு வேறு சந்தர்ப்பங்களில் தனித்தனியாக சம்பந்தன் ஐயாவுடன் தொடர்பு கொண்டு, தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுப் பேச்சாளர் யார் என்று விசாரித்த போது, "அதில் என்ன சந்தேகம்? சுமந்திரன்தான்" - என்று சம்பந்தன் ஐயா திட்டவட்டமாக கூறியிருந்தார் என்பது இவ்விடயத்தில் நினைவும் கூரத்தக்கது.

\+ \+ \+

புதிய அரசில் முதலாவது அரசியல் அதிகாரப் பழிவாங்கல் வடக்கில் இடம்பெற்றுள்ளதாக முக்கிய வட்டாரம் ஒன்று தகவல் வெளியிட்டது.

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் ம.ஜெகுவை அப்பதவியில் இருந்து நீக்கி வடக்கு ஆளுநர் நா.வேதநாயகன் கடிதம் வழங்கியுள்ளார்.

மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களத்தில் 11 ஆண்டுகளாகப் பணியாற்றும் அலுவலக உதவியாளர் ஒருவர் மாவட்டப் பொறியியலாளருடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக வவுனியா மாவட்ட அலுவலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டு அலுவலக விசாரணை இடம்பெறுகின்றது.

அண்மையில் ஏற்பட்ட விபத்தின் காரணமாகத் தன்னால் வவுனியாவிற்குப் பயணிக்க முடியவில்லை எனவும், மீண்டும் மன்னாருக்கே இடமாற்றம் வழங்குமாறும் அலுவலக உதவியாளர் ஆளுநரிடம் எழுத்தில் கோரிக்கை விடுத்துள்ளார். இதனை ஆராய்ந்த ஆளுநர், மேற்படி அலுவலக உதவியாளரை மீண்டும் மன்னாருக்கே மாற்றிவிடுமாறு செயலாளர் ஊடாகக் கடிதம் அனுப்பியுள்ளார்.

ஆளுநர் அனுப்பி வைத்த கடிதத்திற்கு, மன்னார் அலுவலக உதவியாளருக்கு எதிராக ஆரம்ப விசாரணை இடம்பெறுவதனால்,விசாரணைஅறிக்கை கிடைக்கும் வரையில் மன்னாருக்கு இடம்மாற்றம் வழங்க முடியாது என செயலாளர் ஜெகு ஆளுநருக்கு பதிலளித்துள்ளார்.

இந்தச் சம்பவங்களின் பின் விளைவாக, விவசாய அமைச்சின் செயலாளர் பதவியில் இருந்து ம.ஜெகு ஆளுநரால் பதவி நீக்கப்பட்டுள்ளார். இது ஓர் அரசியல் அதிகாரப் பழிவாங்கல் என சில வட்டாரங்கள் சுட்டிக் காட்டப்படுகின்றன.

## வடக்கு மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மற்றும் கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசன, மீன்பிடி, நீர் விநியோக மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளர் எம்.ஜெகுவின் பதவி, வடக்கு மாகாண ஆளுநரால் மீளப்பெறப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண ஆளுநரின் ஊடகப் பிரிவு நேற்று இரவு அறிவித்துள்ளது.

# குளியாப்பிட்டி ஆற்றில் வீழ்ந்த ஜீப்! இரண்டு சகோதரர்கள் உயிரிழப்பு!!

(எம்.எச்.எம். சியாஜ்)

குளியாப்பிட்டி – ஹெட்டிபொல வீதியில் கம்புரபொல புத்கமுவ ஆற்றில் ஜீப் வாகனம் ஒன்று நேற்று சனிக் கிழமை அதிகாலை வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள் ளது.

இதன்போது ஜீப்பில் பயணித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 23 மற்றும் 26 வயதுடைய இரண்டு சகோதரர்கள் பரிதாபக ரமாக உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்து பற்றிய மேலதிக விசாரணைகளை குளியாப் பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## எம் மாவீரர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாவீரர் வாரத்தை முன்னிட்டு, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உருத்திரபுரம் வட்டாரக் கிளையினரின் ஒழுங்கமைப்பில் அந்த வட்டாரத்துக்குட்பட்ட மாவீரர்களின் பெற்றோர் மற்றும் உரித்துடையோரை மதிப்பளிக்கும் நிகழ்வு நேற்று சனிக் கிழமை நடைபெற்றது. அந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

“இனத்தின் வரலாற்றை, தம் இருப்பை நிலைநாட்டு வதற்காக எமது இனத்தின் புதல்வர்கள் புரிந்திருக்கும் ஆகப் பெரும் தியாகத்தை, இந்தத் தலைமுறை உணரத் தலைப்பட்டால் மட்டுமே, ஆக்கிரமிப்பின் கால்கள் ஆழ வேரூன்றியிருக்கும் இலங்கை நாட்டில், ஈழத்தமிழர்களின் இருப்பு உறுதிபடும் என்பதை உணர்ந்தவர்களாக, மாவீரர் மாண்பையும், அவர்களது பற்றுறுதிமிக்க தமிழ்த் தேசியக் கொள்கையையும், ஈழ விடுதலைப் போரின் நியாயாதிக்கங்க ளையும் உணர்ந்த சமூகமாக எங்களின் இளையோரைப் புடம்போடுவதே மாவீரர்களுக்கும், அவர்களை மடியீந்த பெற்றோருக்கும் நாங்கள் செய்யும் மரியாதையாக இருக்கும்.

தங்கள் பிள்ளைகளை, இந்தத் தேசத்துக்காகத் தாரைவார்த் துக்கொடுத்த பெற்றோர்களுக்கு, தமிழ்த் தேசிய உணர்வு சிதையாவண்ணம் எங்கள் சந்ததியைச் செதுக்குவோம் என்ற உறுதியை வழங்குவதொன்றே நிறைவைத் தரும்.” – என்றார்.











# நல்லூரில் மாவீரர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அஞ்சலிக்காக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டன.

மாவீரர்களின் பெற்றோர் மற்றும் முன்னாள் போராளிகளின் பங்கேற்புடன் நேற்று மாலை 6 மணியளவில் கல்வெட்டுக்கள் அடங்கிய நினைவாலயம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

குறித்த நினைவாலயம் நவம்பர் 27ஆம் திகதி வரையில் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது.

1982 கார்த்திகை 27 இலிருந்து 2009 வைகாசி 18 வரையான காலப்பகுதியில் தாய் மண்ணின் விடியலுக்காய் வித்தாகியவர்களில் விபரங்கள் பெற்றுக்கொள்ள முடிந்த 24 ஆயிரத்து 379 மாவீரர்களின் பெயர்களை உள்ளடக்கிய கல்லறைகளையும், சில தகவல்களையும் உள்ளடக்கி இந்த நினைவாலயம் அமைக்கப்பட்டுள்ளது.

























# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சொன்னதைச் செய்யுங்கள்!

“அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் பற்றி கதைப்பதற்கான தருணம் இதுவல்ல. எனவே, வழங்கிய உறுதி மொழியின் பிரகாரம் புதிய அரசமைப்பை இயற்றுவதற்குரிய பணிகளை தேசிய மக்கள் சக்தி முன்னெடுக்க வேண்டும். அதற்கு ஆதரவு வழங்கப் படும்.”

- இவ்வாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்திருக் கின்றது.

இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக் தியின் களுத்துறை மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் சட்டத்தரணி அஜித் பி பெரேரா ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

“13,14,15 என கதைத்துக்கொண்டி ருப்பதற்கான தருணம் இதுவல்ல. நாட்டுக்குப் புதியதொரு அரசமைப்பு அவசியம். நாடாளுமன்றத்தில் இதனை செய்வதற்குரிய மூன்றிலிரண்டு பெரும் பான்மை பலமும் தேசிய மக்கள் சக் திக்கு கிட்டியுள்ளது. அதேபோல வடக்கையும், கிழக்கையும், மலையகத் தையும் கூட பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சியாக தேசிய மக்கள் சக்தி மாறி யுள்ளது. மூவின மக்களையும் பிரதி நிதித்துவப்படுத்தும் உறுப்பினர்கள் அக்கட்சியில் உள்ளனர். புதிய அர சமைப்பு கொண்டுவரப்படும் என்ற உறுதிமொழியை தேசிய மக்கள் சக்தி கொண்டுவர வேண்டும். அதற்குரிய ஆதரவை நாம் வழங்குவோம். ஒரு வருட காலப்பகுதிக்குள் இதற்குரிய ஏற்பாடு களைச் செய்ய வேண்டும். சர்வகட்சி பொறிமுறை ஊடாக இதற்கான பணியை முன்னெடுத்தால் நல்லது.” - இப்படி அவர் கூறியிருக்கின்றார்.

ஆட்சியைப் பிடித்திருக்கும் ஜனா திபதி அநுர குமார திஸநாயக்க மற்றும் தேசிய மக்கள் சக்தி ஆகிய தரப்பினரின் இந்தத் தேர்தல் கால பிரதான வாக்கு றுதி புதிய அரசமைப்பு உருவாக்குதல் என்பதுதான். அதில் இரண்டு கருத்- துக்கு இடமில்லை.

ஆயினும் கூட, அந்தப் பிரதான வாக் குறுதியை நிறைவேற்றுவதற்கு முன் பதான ஏற்பாடுகள் பற்றியும் தமது தேர் தல் விஞ்ஞாபனத்தில் அநுர குமார திஸ நாயக்கவும் அவரது கட்சியினரும் சில வாக்குறுதிகளை வழங்கி இருக்கிறார்கள் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

புதிய அரசமைப்பு உருவாக்கம் வரை 13 ஆவது திருத்தத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட மாகாண சபை முறைமை முழு அளவில் நடைமுறைப்படுத்தப்படும் என்று ஜனாதிபதியும் அவரது கட்சி யினரும் தங்கள் தேர்தல் விஞ்ஞாபனத் தில் உறுதியளித்திருந்தார்கள்.

ஆகவே அதனையும் அவர்கள் நிறை வேற்ற வேண்டும்.

ஆனால், சில தினங்களுக்கு முன்னர் தனது அரசாங்கத்தின் கொள்கை விளக்க உரையை நாடாளுமன்றத்தில் ஆற்றிய ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க புதிய அரசமைப்பு உருவாக்கம் குறித் தும் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித் தும் கால வரையறை குறிப்பிட்டு எந்த வாக்குறுதியையும் தரவில்லை. எந்தக் கருத்துக்களையும் வெளியிடவில்லை. இந்த விடயத்தில் தமது திட்டங்களை - தமது சீட்டுக்களை - நெஞ்சுக்கு நெருக்க மாக, மற்றவர்களுக்கு காட்டாமல் மறைத்து வைத்து, அவர் விளையாட முயலுகின்றார்.

புதிய அரசமைப்பு உருவாக்கம் என்பது நீண்ட காலம் எடுக்கும் ஒரு முயற்சி. ஏற்கனவே 2016 முதல் 201. வரையான நல்லாட்சிக் காலத்தில் முன்னெடுக்கப் பட்ட புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சியை தொடர்ந்து மேற்கொண்டு பூர்த்தி செய்வது என்ற தனது தேர்தல் கால வாக்குறுதியை ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க நிறைவேற்றுவதாயின் அதற்கும் அவருக்கு குறைந்தது ஒன்று, ஒன்றரை வருடங்களாவது தேவைப் படலாம். அதுவரைப் பார்த்திருக்கா மல், ஏற்கனவே கொடுத்த வாக்குறுதிப் படி 13 ஆவது திருத்தத்தின் கீழான மாகாண சபை முறைமையை முழு அள வில அவர் நடைமுறைப்படுத்த வேண் டும். அதற்காக நிலுவையில் இருக்கும் மாகாண சபைத் தேர்தலை விரைந்து நடத்த அவர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

என்றோ ஒரு நாள் வரப் போகின்ற புதிய அரசமைப்பைக் காட்டி 13 ஆவது திருத்தத்தின் கீழ் மாகாண சபையின் முழு நடைமுறையாக்கம் என்ற தமது வாக்குறுதியை ஜனாதிபதி விட்டு விலக முடியாது. விலகக் கூடாது. அப்படி விலகுமாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பது இவ் விடயத்தில் சம்பந்தப்பட்ட சிறுபான் மையினரான தமிழர் தரப்பின் கருத்தி யல் அல்ல.

இது விடயத்தில் தான் கொடுத்த தேர்தல் கால வாக்குறுதிகளை தவறா மல் நிறைவேற்ற அரசுத் தலைவர் முன்வர வேண்டும். அதுதான் நியாயம். அதுதான் நீதி. அதுதான் ஒழுங்கு.





# த.வெ.க. மாநாட்டுக்கு நிலம் வழங்கிய விவசாயிகளுக்கு விருந்தளித்தார் விஜய்

தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் மாநில மாநாடு நடைபெற நிலம் வழங்கிய விவசாயிகளை நேரில் அழைத்து விருந்தளித்து நடிகர் விஜய் கௌரவப்படுத்தியுள்ளார். மேலும் நிலம் வழங்கி மாநாடு நடைபெற உதவியதற்காக அவர்களுக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் மாநில மாநாடு விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி அருகேயுள்ள வி.சாலை பகுதியில் கடந்த ஒக்டோபர் 27 ஆம் திகதி நடைபெற்றது. இந்த மாநாடு நடைபெற விக்கிரவாண்டி பகுதியில் உள்ள விவசாயிகள் நிலம் கொடுத்து உதவினர்.

இந்த நிலையில், மாநாடு நடைபெற இடம் வழங்கிய நிலத்தின் உரிமையாளர்களை நேரில் அழைத்து அவர்களுக்கு விருந்தளித்து கௌரப்படுத்தியுள்ளார் விஜய்.

சென்னை பனையூரில் உள்ள கட்சி அலுவலகத்தில் சனிக்கிழமை விருந்து நடைபெற்றது. இதில் விவசாயிகள் தங்கள் குடும்பத்துடன் கலந்து கொண்டனர். அவர்களுக்கு விருந்தளித்த விஜய் நன்றி தெரிவித்ததுடன், குடும்பத்தினருடன் உரையாடியுள்ளார். மேலும் விவசாயிகளுக்கு தாம்பூலம் போன்ற சிறிய பரிசு ஒன்றையும் வழங்கியுள்ளார்.

# ராகுல் சாதனையை முறியடித்தார் பிரியங்கா: 4.10 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி



கேரளா வயநாடு மக்களவைத் தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் பிரியங்கா காந்தி தனது முதல் தேர்தலில் சகோதரனின் சாதனையை முறியடித்துள்ளார். பல எதிர்பார்ப்புகளை மீறி அவர் வயநாட்டில் 4 லட்சத்து 10 ஆயிரத்து 931 வாக்குகள் வித்தியாசத்தில் அவர் வெற்றி பெற்றுள்ளார்.

முன்னதாக கடந்த 2019 மக்களவை தேர்தலில் வயநாட்டில் 7.06 லட்சம் வாக்குகளை ராகுல் காந்தி பெற்றிருந்தார். 2024 இல் 6.47 லட்சம் வாக்குகள் பெற்றிருந்தார். இப்போது வயநாடு இடைத்தேர்தலில் பிரியங்கா காந்தி வாக்கி எண்ணிக்கை நிறைவு பெறுவதற்கு முன்னரே 6,22 லட்சம் வாக்குகள் பெற்றுள்ளார்.

ரே பரேலி தொகுதி எம்.பி.யாக இருக்கும் ராகுல் காந்தி 2024 மக்களவைத் தேர்தலில் வயநாட்டிலும் போட்டியிட்டு 3.65 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தார். முன்னதாக, 2019 மக்களவைத் தேர்தலில் அமேதியிலும், முதல் முறையாக வயநாட்டிலும், போட்டியிட்ட போது அமேதியில் தோல்வியடைந்த ராகுல் காந்தி 4 லட்சத்துக்கும் அதிகமான வாக்குகள் வித்தியாசத்தில் வயநாட்டில் வெற்றி பெற்று தனது மக்களவை உறுப்பினர் பதவியைத் தக்கவைத்துக் கொண்டார்.

இதனிடையே, வயது மூப்பு காரணமாக தேர்தல் அரசியலில் இருந்து விலகுவதாக அறிவித்த சோனியா காந்தி, காங்கிரஸ் கோட்டையான ரேபரேலி தொகுதியை விட்டுக் கொடுத்தார். அதனைத் தொடர்ந்து பிரியங்கா காந்தி அங்கு போட்டியிடலாம் என்ற ஊகங்களுக்கு மத்தியில் 2024 மக்களவைத் தேர்தலில் ரேபரேலி, வயநாடு என இரண்டு தொகுதிகளில் ராகுல் காந்தி போட்டியிட்டு வெற்றி பெற்றார். பின்பு தனது வயநாடு எம்.பி., பதவியை இராஜினாமா செய்தார்.

அதனைத் தொடர்ந்து இடைத்தேர்தலைச் சந்தித்த வயநாட்டில் காங்கிரஸ் சார்பில் பிரியங்கா காந்தியை நிறுத்தும் முடிவினை காங்கிரஸ் எடுத்தது. இதனைத் தொடர்ந்து வயநாட்டில் போட்டியிட்டு பிரியங்கா தனது தேர்தல் அரசியல் பயணத்தில் அடியெடுத்து வைத்தார்.

வயநாடு இடைத்தேர்தல் வாக்குகள் இன்று எண்ணப்பட்ட நிலையில் தனது முதல் தேர்தலில் பிரியங்கா காந்தி 6,22,338 வாக்குகள் பெற்றுள்ளார். அவரைத் தொடர்ந்து சி.பி.ஐ. வேட்பாளரும் மூத்த அரசியல்வாதியுமான சத்யன் மோகேரி 2,11,407 வாக்குகள் பெற்று இரண்டாம் இடத்திலும், பா.ஜ.கவின் நவ்யா ஹரிதாஸ் 1,09,939 வாக்குள் பெற்று மூன்றாவது இடத்தில் உள்ளார்.

பிரியங்கா காந்தியின் வெற்றிக்காக கடந்த ஒருமாதமாக அவரது சகோதரர் ராகுல் காந்தியும், தாயார் சோனியா காந்தியும் தீவிர பிரச்சாரம் மேற்கொண்டனர். பிரச்சாரத்தின் போது ராகுல் காந்தி வயநாட்டினை சிறந்த சுற்றுலா தளமாக மாற்ற வேண்டும் என்று தனது சகோதரிக்கு அவர் சவால் விடுத்தார்.



# லெபனானில் இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் 11 பேர் பலி

லெபனானின் தலைநகரான பெய்ரூட்டின் மத்திய பகுதியில் இஸ்ரேலினால் நேற்று நடத்தப்பட்ட வான்வழித் தாக்குதலில் 11 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

அத்துடன், 60 இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெய்ரூட்டில் உள்ள 8 மாடிக் கட்டிடம் தாக்கப்பட்டதில் அந்த கட்டிடம் முற்றாக சேதமடைந்துள்ளது.

கடந்த செப்டம்பர் மாதம் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஹெஸ்புல்லா அமைப்பின் தலைர் ஹசன் நஸ்ரல்லா உள்ளிட்ட ஹெஸ்புல்லா அமைப்பின் சிலர் கொல்லப்பட்டனர்.

இந்தநிலையில், நேற்று நடத்தப்பட்ட தாக்குதல் எந்தவொரு முன்னறிவிப்பின்றி நடத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது, மேற்படி பகுதிகளில் மீட்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

மேற்படி தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காண டி.என்.ஏ பரிசோதனை நடத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# புடினின் எச்சரிக்கைக்கு ஸ்வீடன் பயப்படாது

## பாதுகாப்பு அமைச்சர் பால் ஜான்சன் தெரிவிப்பு

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் கடுமையான எச்சரிக்கைக்கு ஸ்வீடன் பயப்படாது என அந்த நாட்டு பாதுகாப்பு அமைச்சர் பால் ஜான்சன் தெரிவித்துள்ளார்.

ரஷ்யா – உக்ரைன் இடையிலான போர் நாடுகள் என்ற நிலையை கடந்து சர்வதேச போராக மாறிவருகின்றது.

இவ்வாறான ஒரு நிலையில், உக்ரைனுக்கு உதவும் நாடுகளுக்கு ரஷ்யா தக்க பதிலடி கொடுக்கும் என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் கடுமையாக எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதற்கு பதிலளிக்கும் வகையில், ரஷ்யாவின் இந்த மிரட்டலுக்கு ஸ்வீடன் பயப்படாது என அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் பால் ஜான்சன் தெரிவித்துள்ளார்.

நீண்ட தூர ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களை வாங்குவதற்கு உக்ரைனுக்கு கணிசமான அளவு நிதியுதவியை ஸ்வீடன் அளிக்கும் என்ற அறிவிப்பை வெளியிட்ட போதே அவர் இந்த கருத்தை கூறியுள்ளார்.



அத்துடன், உக்ரைனை ஆதரிப்பதில் இருந்து தங்களைப் பயமுறுத்தும் முயற்சிதான், ரஷ்யாவின் மிரட்டல் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், ரஷ்யாவின் இந்த அச்சுறுத்தும் முயற்சி தோல்வியடையும் என கூறியுள்ளார்.




# சர்வதேச நாணய நிதியக் கடன் 3 ஆம் கட்டம் அலுவலர் மட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டது

## பீட்டர் ப்ரூவர் தெரிவிப்பு

சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான நீடிக் கப்பட்ட கடன் வசதிக்குறட்பட்ட 330 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான 3 ஆம் கடன் தவணை தொடர்பில் ஊழியர் மட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாக சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான பிரதிநிதிகள் குழுவின் பிரதானி பீட்டர் ப்ரூவர் தெரிவிக்கிறார்.

மத்திய வங்கியின் கேட்போர் கூடத்தில் நேற்று முற்ப கல் நடைபெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் மூன்றாவது மீளாய்வு தொடர்பான விசேட ஊடக சந்திப்பில் அவர் இதனை குறிப்பிட்டார்.

சர்வதேச நாணய நிதியத்தினால் இலங்கைக்கு வழங்கப் பட்டுள்ள 4 வருட காலப்பகுதியைக் கொண்ட நீடிக்கப்பட்ட கடன் வசதி தொடர்பில் நாட்டின் அதிகாரிகளுடன் கலந்து ரையாடியதாக அவர் கூறினார்.

இந்த கலந்துரையாடல்களின் பிரதிபலனாக ஊழியர் மட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாக சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான பிரதிநிதிகள் குழுவின் பிர தானி பீட்டர் ப்ரூவர் தெரிவித்தார்.

ஊழியர் மட்ட இணக்கப்பாடு தொடர்பான உடன்படிக்கை அங்கீகாரம் பெறுவதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவம் மற்றும் நிறைவேற்று சபைக்கு அனுப்பப் பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாடுக ளுக்கு அமைய இந்த ஆண்டு ஜூன் மாத இறுதி வரையிலான இலக்குகள் குறிப்பிடத்தக்க அளவு பூர்த்தி செய்யப்பட்டுள்ள துடன், செப்டெம்பர் அளவில் வேலைத்திட்டத்தின் செயற்றி றன் வலுவாகக் காணப்படுவதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

ஒக்டோபர் மாதத்திற்கு முன்னதாக பெரும்பாலான கட்ட மைப்பு ரீதியான இலக்குகள் தாமதத்துடனேனும் செயற்படுத் தப்பட்டுள்ளதாக சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் நேற்று நடைபெற்ற விசேட ஊடக சந்திப்பில் கூறினர்.

புதிய அரசாங்கத்திற்கான மக்கள் ஆணை, ஊழல் இன்றி பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கானது எனவும் சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகள் இதன்போது வலியுறுத்தினர்.

வறிய மற்றும் பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாக்கும் பொறுப்பு அரசாங்கத்திற்கு உள்ளதெனவும் அவர்கள் சுட் டிக்காட்டினர்.

நீடிக்கப்பட்ட கடன் வசதியின் மூன்றாவது தவணையை விடுவிப்பதற்கான மீளாய்வுக்காக கடந்த 17ஆம் திகதி இலங்கையை வந்தடைந்த சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல்களில் ஈடுபட்டதும் குறிப்பிடத்தக்கது.

# நாட்டின் பல பகுதிகளில் 150 மில்லி மீற்றர் மழை



வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்க ளின் சில இடங்களில் நாளை சுமார் 150 மில்லிமீற்றர் அள வில் பலத்த மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

அத்துடன், நாட்டின் ஏனைய பகுதிகளில் மாலை அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழையின் போது, பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக் கொள்ள போதிய முன்னெச்சரிக்கை நடவடிக் கைகளை எடுக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.

# றுஹுணு பல்கலைக்கழகத்தில் தொடரும் பணிப்புறக்கணிப்பு




றுஹுணு பல்கலைக்கழகத்தின் உபவேந்தரை உடனடியாக பதவி விலகாவிடின் கடுமையான தொழிற்சங்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாகப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க சம்மேளனம் அறிவித்துள்ளது.

அந்த சங்கத்தின் தலைவர் அனுருத்த கருணாரத்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

றுஹுணு பல்கலைக்கழகத்தின் உப வேந்தர் பதவி விலக்கப்பட வேண்டும் எனக் கூறி சுமார் 5 நாள்களாக, அந்த பல்கலைக்கழகத்தின் கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

# கைபேசிகளை பயன்படுத்த பரீட்சை மண்டப பொறுப்பதிகாரிகளுக்கு மட்டுமே அனுமதி




நாளை ஆரம்பமாகவுள்ள கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சையின் போது, பரீட்சை மண்டப பொறுப்பதிகாரிகளுக்கு மாத்திரமே பரீட்சை நிலையங்களுக்குள் கைபேசிகளை பயன்படுத்த அனுமதிக்கப்படும் என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

விசேட செய்தியாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பொறுப்பதிகாரிகளுடன் தொடர்பு கொள்வதற்கான தேவை உள்ளதால் மாத்திரமே அவர்களுக்கும் கைபேசி பாவனைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், மேலதிக பரீட்சை மண்டப பொறுப்பதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளவர்களும் கைபேசிகளை பரீட்சை பயன்படுத்த முடியும் முன்னதாக பரீட்சை மண்டபத்தில் பணிபுரிந்த அனைவருக்கும் கைபேசிகளை பயன்படுத்த சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில், இந்தமுறை கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சையின் போது, பரீட்சை மண்டப உதவி பொறுப்பதிகாரிகள் அல்லது கண்காணிப்பாளர்கள் கைபேசிகளை பயன்படுத்த அனுமதிக்கப்படமாட்டாது என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், பரீட்சை காலங்களில் அனர்த்தங்களால் பாதிக்கப்படும் பரீட்சார்த்திகளுக்கான வசதிகள் அனர்த்த முகாமைத்துவ நிலையத்துடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சைக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. முதல் ஆறு நாள்களுக்குத் தேவையான வினாத்தாள்கள் பரீட்சை மத்திய நிலையங்களுக்கு நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சையானது 2,312 பரீட்சை மத்திய நிலையங்களில் இடம்பெறவுள்ளது. இந்த முறை பரீட்சைக்காக 333,183 பேர் தோற்றவுள்ளனர்.

அவர்களில் 253,380 பாடசாலை பரீட்சார்த்திகளும் 79,795 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் அடங்குகின்றனர்.

உயர்தரப் பரீட்சை தொடர்பான விரிவுரைகள், பயிற்சி வகுப்புகள், மற்றும் கருத்தரங்குகளை நடத்துவதற்கு ஏலவே தடை விதிக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில் தற்போது, கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சைகளுக்கான மாதிரி வினாக்கள் அடங்கிய வினாத்தாள்களை அச்சிடுவது மற்றும் விநியோகிப்பது ஆகியவற்றுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2024

“ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர, மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் ,ருகக் வேண்டும்.”

- தியோடர் ரூஸ்வெல்ற்
(அமெரிக்காவின் 26ஆவது ஜனாதிபதி



# இறைவனால் எமக்குத் தரப்பட்ட வரப்பிரசாதமே இந்தத் தேர்தலின் முடிவுகள் என்கின்றார் விக்கி

நடந்த தேர்தல் முடிவுகள் எமக்கு இறைவனால் தரப்பட்ட வரப்பிரசாதமாகும் என்று கூறியிருக்கின்றார் முன்னாள் யாழ் மாவட்டம் நாடாளுமன்ற உறுப்பினர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்.

“மாதத்திற்கொரு கேள்வி” என்ற தலைப்பில் அவர் வெளியிட்ட கேள்வி – பதில் அறிக்கையிலேயே இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையிலே மேலும் கூறப்பட்டவை வருமாறு:-

**கேள்வி:-தமிழ்த்தேசியம்அழிந்து விட்டதா? தேர்தல் முடிவுகள் அதனை உறுதிப்படுத்துகின்றன அல்லவா?**


பதில் :– தமிழீழம் பெற முடியாது போய்விடுமா என்று தம்பி பிரபாகரனிடம் ஒருவர் கேட்டார். அதற்கு அவர் அளித்த பதில் “தமிழீழத்தைப் பெறவேண்டிய அவசியம் இல்லை. அது ஏற்கனவே இருக்கின்றது. அதனைப் பாதுகாப்பதற்காகத் தான் நாங்கள் போராடுகின்றோம்.” என்றாராம்.

அதே போல் தமிழ்த் தேசம் ஏற்கனவே நடைமுறையில் இருக்கின்றது. அதனைப் பாதுகாக்கும் மனோநிலையே தமிழ்த் தேசியம். தமிழ்த்தேசம் அழிந்து விடவில்லை. தேர்தலின் பின்னர் தமிழ்த் தேசத் தெருக்கள் பலவற்றில் இராணுவத் தடைகள் நீக்கப்பட்டதைப் பார்த்திருப்பீர்கள். தமிழர் தம் தேசத்தில் வீதித் தடைகள் தேவையில்லை என்று அரசாங்கம் முடிவெடுத்ததே எமது பிரதேசம் தமிழர் தம் தேசமே என்ற அடிப்படையிலேயே. ஆனால் அவர்கள் ஒரே நாட்டிற்குள் தமிழ்ப் பேசும் பிரதேசங்களில் ஏன் இந்தப் பாகுபாடு என்ற அடிப்படையில்தான் தமது தீர்மானத்தை எடுத்துள்ளனர். அவர்களுக்கும் எமக்கும் இருக்கும் வித்தியாசம் என்னவென்றால் பெரியதொன்றில் சிறு பகுதி நாம் என்பது அவர்கள் சிந்தனை. சுதந்திரமான சம அலகுகள் கொண்டதே இலங்கை என்பது எமது பார்வை.

வடக்கு கிழக்கு தமிழ்மொழி பேசும் பிரதேசங்கள் என்ற உண்மையை உணர்ந்து செயலாற்றுபவர்கள் தமிழ்த் தேசியத்தை அழிப்பவர்கள் என்று அடையாளம் காட்டமுடியாது.

தமிழ்த் தேசிய சிந்தனையை வைத்து வியாபாரம் நடத்தியவர்கள் தேர்தலில் காணாமல் போயுள்ளார்கள். தமிழ்த் தேசீய சிந்தனையை ஏளனம் செய்து கட்சிகளைப் பிரித்து சுயநல அரசியல் நடத்திய ஒருவர் காணாமல் போயுள்ளார். தமிழ்த் தேசியவாதிகள் நாம் என்று மார் தட்டி அதே நேரத்தில் சொந்த நலம் கருதி அரசியல் செய்தவர்கள் பலர் காணாமல் போயுள்ளனர். அவர்கள் மீண்டும் வந்து தமிழர் வாழ்வை சின்னாபின்னமாக்கவிடாது அவர்களை இறைவன் வீட்டிற்கு அனுப்பியுள்ளான். உங்கள் கேள்விக்குக் காரணம் என்ன என்று பார்த்தோமானால் தேர்தலில் அரசாங்கம் வடகிழக்கில் ஆசனங்கள் பெற்றமையே என்பது புலப்படும். ஆனால் நடந்த தேர்தல் முடிவுகள் எமக்கு இறைவனால் தரப்பட்ட வரப்பிரசாதமாகும்.

தமிழ்த் தேசியத்தை முன்னர் ஆதரித்தவர்கள் இன்னமும் தமிழ்த் தேசியத்துடன் தான் இருக்கின்றார்கள். ஆனால்



பல சுயேச்சைக் கட்சிகளின் காரணத்தாலும் பல வருட கால கட்சிகள் தேர்தல் உடன்பாடுகளுக்கு இடம் கொடுக்காமையாலும் அவர்கள் செய்வதியாது பிரிந்து நின்று வாக்களித்துள்ளார்கள்.

உதாரணத்துக்கு டக்ளஸ் தேவானந்தா, அங்கஜன் இராமநாதன் ஆகியோரின் முன்னைய வாக்குகளே இம் முறை யாழ்ப்பாணத் தொகுதியில் அரசாங்கக் கட்சிக்குப் போயுள்ளது. புதிதாக வாக்களிக்க தகைமை பெற்ற இளைஞர்களின் வாக்குகளும் அரசாங்கக் கட்சிக்குப் போயுள்ளன. அவை அரசாங்கக் கட்சி செய்த வலுவான தேர்தல் பிரச்சாரத்தின் நிமித்தமே அரசாங்கக் கட்சிக்குச் சென்றுள்ளன. ஆனால் தமிழ்த் தேசியத்துடன் நிற்கும் கட்சிகளின் வாக்குகளை கூட்டிப் பார்த்தால் தமிழ்த் தேசியத்திற்கான எம் மக்களின் ஆதரவு குறையவில்லை என்றே தெரிகின்றது.

இது எமது ஒற்றுமையின்மையை எமக்கு உணர்த்தியுள்ளது. தமிழ்த் தேசியக் கட்சிகள் தோற்றமை தமிழ்த் தேசியம் அழிந்துவிட்டதால் என்று கூறமுடியாது. நாம் ஒருங்கிணைந்து தமிழ்த் தேசியத்தைக் கொண்டு செல்ல முன்வராமையே காரணம். அடுத்த முறை சுதந்திரமான தேர்தல் என்று ஒன்று இருந்து நாம் இணைந்து போட்டியிட்டால் தமிழ்த் தேசியம் மீண்டும் வெல்லும். இவ்வாறான உடன்பாடு இம்முறை திருகோணமலையில் எட்டப்பட்டதால் தமிழ்ப் பேசும் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.

ஆனால் ஒற்றுமை என்பது சுட்ட மண்ணுக்கும் சுடாத மண்ணுக்கும் ஏற்படக் கூடிய ஒரு உடன்பாடாக இருக்க முடியாது. பல வருடகாலம் சுயநல அரசியலில் ஈடுபட்ட தமிழ்த் தேசியம் பேசுவோருக்கும் உண்மையாகத் தமிழ் தேசியத்தை உணர்ந்து வருங்கால சந்ததியினர் சார்பாக செயலாற்றத் துடிப்போருக்கும் இடையில் உடன்பாடுகள் ஏற்பட்டால் அது தேர்தல் காலங்களில் ஓரளவிற்கு மட்டும் நன்மை தருவதாக அமையலாம். ஆனால் அது நிரந்தரமாகாது. உதாரணத்துக்கு பாண்டவர்களும் கௌரவர்களும் ஒற்றுமைப்பட வேண்டும் என்று பலர் சுட்டிக் காட்டினார்கள். சுயநலமும் ஆணவமும் நிறைந்த கௌரவர்கள் தம்மை முன்னிலைப்படுத்தி ஒற்றுமை ஏற்படுவதைத் தடுத்துவிட்டார்கள். குறிப்பிட்ட தருணங்களில் இருசாராரும் ஒன்றிணைந்தார்கள். ஆனால் அது கட்டாயம் நிமித்தம் நடந்ததே ஒழிய மனமாற்றத்தாலோ புரிந்துணர்வாலோ அல்ல. பீஷ்மர் இறந்த போது, துரோணர் இறந்த போது இருசாராரும் சேர்ந்து மரண சடங்குகளில் ஈடுபட்டார்கள். ஆனால் அப்போதும் ஒருவர் மற்றவரை சூழ்ச்சியாளர்கள் என்று குறை கூறிக் கொண்டேதான் இருந்தார்கள். தர்மிகளும் அதர்மிகளும் ஒற்றுமைப்பட முடியாது. அதர்மிகள் அழிக்கப்பட்டால் தான் தர்மிகள் நாட்டை ஆளமுடியும் என்று கிருஷ்ண பரமாத்மா கூறினார். அதற்காக அதர்மிகள் அனைவரும் சுவடு தெரியாமல் அழிக்கப்பட வேண்டும் என்பதே நியதி என்றார். பாண்டவர்களும் அதன்பின் அவர்கள் பேரனார் பரீட்சித்தும் தர்ம அரசாங்கம் நடத்த முன் கௌரவர்கள் அனைவரும் அழிக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டு அதுவே நடந்தேறியது. வருங்காலங்களில் இந்தத் தேர்தலில் தோல்வி கண்ட பலர் மீண்டும் எழுச்சி பெறாமல் நாங்கள் பார்த்துக் கொள்ள வேண்டும். இன்றைய அரசாங்கத்தை விட அவ்வாறான சுயநல சிந்தனை கொண்ட அரசியல்வாதிகள் தமிழர்களுக்கும் தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகளுக்கும் கூடிய பாதிப்பை ஏற்படுத்தக் கூடியவர்கள் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

“மாற்றமே வாழ்க்கையின் நியதி. நடந்தவை பற்றியும் இன்றைய நிலை பற்றியும் சதா சிந்தித்துக் கொண்டிருப்பவர்கள் எதிர்காலத்தைக் கட்டாயமாக மறந்து விடுகின்றார்கள்” என்றார் முன்னைய அமெரிக்க ஜனாதிபதி ஜோன்.எவ்.கெனெடி அவர்கள். ஆகவே எதிர்காலத்தில் நீங்கள் சுயநல அரசியலில் இருந்து விடுபட, இம்முறை தோற்ற பலரை மீண்டும் நாடாளுமன்றத்திற்குக் கொண்டு வராமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

நான் நாடாளுமன்றத்தில் வைத்து அப்போது உறுப்பினராக இருந்த அநுர குமார திஸநாயக்கவிடம் “வட கிழக்கைப் பிரித்த உங்கள் கட்சிக்குத் தமிழ் மக்கள் வாக்களிக்கமாட்டார்கள்” என்று கூறினேன். அவர் “இருந்து பாருங்கள்” என்று கூறினார். அவர் கூறியது இப்பொழுது நடந்து விட்டது. அதை நான் ஏற்றுக் கொள்கின்றேன்.

ஆனால் எதிர்காலம் அவ்வாறே இருக்கப் போவதில்லை. தமிழ் மக்கள் தமது நாளாந்த பொருளாதார தேவைகளுக்கு அப்பால் தமிழர்களின் வருங்காலம் பற்றி சிந்திக்க வேண்டிய காலம் வரத்தான் போகின்றது அல்லது வந்து விட்டது!

இன்று வட கிழக்கைத் தமிழ்ப் பேசும் மக்களின் உறைவிடம் என்று மறைமுகமாக ஏற்கும் அரசாங்கம் நாளை வேறு விதமாகச் சிந்திக்காது என்பதற்கு உத்தரவாதம் எதுவுமில்லை. இனிமேல் தேர்தல்கள் நடந்தால் (?) அடுத்து வருகின்ற அரசாங்கங்கள் ஒற்றையாட்சி அரசியல் யாப்பு ஊடாக இனவாட்சி (Ethnocracy) ஒன்றை

தொடர்ச்சி▼

# பறங்கியாறு பெருக்கெடுப்பால் தனிமைப்படும் மிக அபாயக் கட்டத்தில் சிராட்டிகுளம் கிராமம்

## நிலைமைகளை நேரில்சென்று பார்வையிட்டார் ரவிகரன் எம்.பி.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பெய்து வரும் கன மழை காரணமாக பறங்கி ஆறு பெருக்கெடுத்துள்ளது.

இதனால் முல்லைத்தீவு – மாந்தை கிழக்குப் பிரதேசசெயலகப் பிரிவிற் குட்பட்ட சிறாட்டிகுளம் கிராமத்திற்குச் செல்லும் வீதியை மூடி பறங்கிஆற்று நீர் பாய்கிறது. இதனால் சிராட்டிகுளம் கிராமம் தனிமைப்படும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளது. பறங்கியாற்றின் நீர்வரத்து அதிகரிக்குமிடத்து சிராட்டி குளம் கிராமத்துக்கான போக்குவரத்து முற்றாகத் தடைப்படும்.

இந்நிலையில் நேற்று அந்தப் பகுதிக்கு களவிஜயமொன்றை மேற் கொண்ட வன்னிமாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தனிமைப்படும் அபாயத்தை எதிர் நோக்கியுள்ள சிறாட்டிகுளம் கிராம மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்தார்.

பறங்கியாறு பெருக்கெடுத்துள்ள தால் பறங்கியாற்றுப் பாலத்திலிருந்து சிறாட்டிகுளம் கிராமம்வரை சுமார் மூன்று கிலோமீற்றர் தூரம் நடந்து சென்று நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் மக்களின் நிலை மைகள் தொடர்பில் கேட்டறிந்தார்.

பறங்கியாறு பெருக்கெடுத்துப் பாய்வதனால் சிறாட்டிகுளத்திலி ருந்து நட்டாங்கண்டல் பாடசாலைக்கு கல்விகற்பதற்காகச் செல்லும் மாண வர்கள் பலத்த இடர்பாடுகளுக்கு முகங் கொடுக்கவேண்டிய சூழல் ஏற்பட்டுள்து.

அதேவேளை குருதிமாற்று சிகிச்சை பெற்றுவரும் சிறிநீரக நோயாளர்களும், ஏனைய மருத்துவசேவைகளைப் பெறச் செல்பவர்களும் பலத்த இன்னல்க ளுக்கு முகங்கொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அத்தோடு சிறாட்டிகுளம் கிராம மக்களின் அன்றாட செயற்பாடுகளும் இதனால் மிகமோசமாகப் பாதிக்கப் பட்டுள்ளது

இந்த நிலைமைகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சிறாட்டிகுளம் மக்களிடம் கேட்டறிந்ததுடன், இது தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகா மைத்துவ நிலையத்திற்கும், மந்தை கிழக்கு பிரதேசசெயலாளருக்கும் தெரி யப்படுத்தியிருந்தார்.

மேலும் சிராட்டிகுளம் வீதியைச் சீரமைப்புச் செய்துதருமாறு இதன்போது சிராட்டிகுளம் கிராம மக்களால் நடாளு மன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனி டம் கோரிக்கை ஒன்றும் முன்வைக்கப் பட்டது.

இது தொடர்பில் உரிய நடவடிக்கை மேற்கொள்ள முயற்சிகள் மேற்கொள் ளப்படுமென நாடாளுமன்ற உறுப்பி னரால் தெரிவிக்கப்பட்டது.








## இறைவனால் எமக்குத் தரப்பட்ட...

தொடர்ச்சி▲

நிறுவமாட்டா என்று கூறமுடியாது. ஏன் இன்றைய அரசாங்கமே தமது தேர்தல் கால கருத்துக்களை மாற்றி ஒற்றையாட்சியின் கீழ் அவர்களுக்குக் கிடைக்கும் அதிகாரங்களை வடகிழக்கு தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு எதிராகப் பாவிக்கமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

ஆகவே தமிழ்த் தேசம் அழிய வில்லை. எனவே தமிழ்த் தேசியமும் அழியவில்லை. தேர்தல் முடிவுகள் தமிழ்த் தேசியத்தை ஆதரித்தோர் தம்முள் பிரி பட்டு அரசாங்கத்தை வெல்லப் பண்ணி யிருக்கின்றார்களே ஒழிய தமிழ்த் தேசியத்தைத் தமிழ் மக்கள் கைவிட்டு விட்டார்கள் என்று அர்த்தமில்லை. ஐக் கிய நாடுகளின் சிவில் மற்றும் அரசி யல் உரிமைகள் சம்பந்தமான சர்வ தேச உடன்பாட்டின் உறுப்புரை ஒன்றின் கீழ் இலங்கையின் வடகிழக்கு தமிழ்த் தேசம் என்பதை எந்த ஒரு இலங்கை அரசாங்கமும் ஏற்காத வரையில் வட கிழக்கு தமிழர்களின் எதிர்காலம் கேள்விக் குறியாகவே இருக்கும். – என்று உள்ளது.



# மன்னார் மாவட்டத்தில் தொடர் மழையால் பெரு வெள்ளம்

# 2,045 குடும்பங்களைச் சேர்ந்த 7,778 பேருக்குப் பாதிப்பு

**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னார் மாவட்டத்தில் நேற்று முன்தினம் வியாழன் இரவு முதல் நேற்று வெள்ளிக்கிழமை மதியம் வரை பெய்த கடும் மழை காரணமாக 2,045 குடும்பங்களை சேர்ந்த 7,778 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

முறையற்ற கழிவு நீர் முகாமைத்துவத்தினால் மழை நீர் வழிந்தோட முடியாமல் பல பகுதிகள் வெள்ளக் காடாக காட்சியளிக்கிறது.

மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர் பிரதேச மக்கள் அதிகமாக வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக வழமையான வெள்ளப் பாதிப்புகளை அதிகமாக அனுபவித்து வரும் மன்னார் நகரப் பிரதேச செயலாளர் பிரிவில் சாந்திபுரம், ஜிம்ரோன் நகர், எமில் நகர் மக்கள் இம்முறையும் பாரிய பாதிப்புகளுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

இந்தப் பகுதி மக்களின் வீடுகளுக்குள் மழைநீர் தேங்கி உள்ளதால் அவர்கள் எழுத்தூர் பாடசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மழை வெள்ளத்தினால் முதியவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், குழந்தைகள் எனப் பலரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வெள்ள அனர்த்தத்தால் 2,045 குடும்பங்களை சேர்ந்த 7,778 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

மேலும் 4 வீடுகள் பகுதி அளவில் சேதமடைந்துள்ளன. 200 குடும்பங்களை சேர்ந்த 774 பேர் உறவினர்களின் வீடுகளில் தங்கியுள்ளனர்.

107 குடும்பங்களை சேர்ந்த 351 பேர் பாதுகாப்பான 3 இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு மன்னார் அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன், மன்னார் பிரதேசச் செயலாளர் எம்.பிரதீப், மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவி பணிப்பாளர் க.திலீபன் உள்ளிட்ட அதிகாரிகள் நேரடியாக விஜயம் செய்து நிலமையை ஆராய்ந்து வருகின்றனர்.

நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு சமைத்த உணவை வழங்க அதிகாரிகள் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.









# இன்றைய ராசி பலன்கள் - 24.11.2024



மேஷம்

இன்று உங்களுக்கு சாதகமான நாள். நீங்கள் நம்பிக்கை உணர்வுடன் வெற்றியைக் கொண்டாடி மகிழ்வீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகள் மூலம் பிறரை வெல்வீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

கடினமான பணிகளையும் எளிதில் முடிப்பீர்கள். பணியில் உங்கள் செயல்திறனுக்கு அங்கீகாரமும் பாராட்டும் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை பகிர்ந்து மகிழ்வீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகள் உங்கள் துணையை மகிழ்விக்கும். இதனால் இருவருக்கிடையிலான உறவில் நல்ல பிணைப்பு ஏற்படும்.

பணப்புழக்கம் தாராளமாக காணப்படும். உங்கள் வங்கியிருப்பு உயரக் காண்பீர்கள்.

இன்று சிறந்த ஆற்றலுடன் காணபடுவீர்கள்.



ரிஷபம்

இன்று நீங்கள் நம்பிக்கையான மனநிலை கொண்டிருப்பீர்கள். நீங்கள் உறுதியுடன் இருப்பதன் மூலம் இன்றைய நாளின் சவால்களை வெற்றி கொள்ள முடியும்.

இன்று இறுக்கமான பணிகளில் மும்மரமாக இருப்பீர்கள். பணியின்போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது, இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உறவில் நல்லிணக்கம் பராமரிக்க வாக்கு வாதங்களை தவிர்க்கவும்.அமைதியான சகஜமான அணுகுமுறை மூலம் இனிமையற்ற தருணங்களை தவிர்க்கலாம்.

சிறிது பண இழப்பு காணப்படுகின்றது. தேவையற்ற செலவுகளை தவிர்க்க கட்டுப்பாடுடன் செலவு செய்ய வேண்டும்.

வெந்நீர் குடிப்பதன் மூலம் சளியை தவிர்க்க இயலும். குளிர்ச்சியான உணவுகளை தவிர்க்க முயலுங்கள்.



மிதுனம்

இன்று உங்களின் பொறுமை சோதனைக்குள்ளாகும் சூழ்நிலை ஏற்படும். நீங்கள் எளிதில் உணர்ச்சி வசப்படுவீர்கள். நீங்கள் அமைதியான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். உங்கள் இலக்குகளை அடைய கடினமாக போராட வேண்டும்.

பணியிடத்தில் பதட்டமான சூழ்நிலை காணப்படும். பணியிடச் சூழலில் காணப்படும் பதட்டமான் நிலைமை உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உங்கள் துணையிடம் உணரச்சிவசப்படுவீர்கள். இதனால் இருவருக்கிடையேயான உறவு பாதிக்கும். நல்ல புரிந்துணர்விற்கு சகஜமான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது.

பயணத்தின் போது பண இழப்பு காணப்படுகின்றது. பணத்தை கையாளும்போது கவனம் தேவை.



கடகம்

இது உங்களுக்கு சாதகமான நாள். நற்பலன்கள் கிடைக்கும் நாள். உங்கள் தொடர் முயற்சியால் இது சாத்தியம்.

வேலை தொடர்பான பயணம் காணப்படுகின்றது. இது உங்களுக்கு நன்மை பெற்றுத் தரும். வெற்றி கிடைக்கும்.

உங்கள் துணையுடன் சிறந்த உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இன்றைய நாளை உங்கள் துணையுடன் நெருங்கிப் பழகி கழிப்பீர்கள்.

இன்று அதிர்ஷ்டகரமான நாள். இன்று அதிக பண வரவு காணலாம். அந்தப் பணத்தை நீங்கள் ஆன்மீக நோக்கத்திற்கு பயன்படுத்தலாம்.

இன்று உங்கள் மன உறுதி காரணமாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.



சிம்மம்

இன்று பரிசோதனைகுள்ளாகும் நாள். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதலை அளிக்கும். ஆன்மீக யாத்திரை உங்களுக்கு பயனளிக்கும்.

பணியிடச் சூழலில் அசௌகரியம் காணப்படும். உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது கவனமுடன் இருக்க வேண்டும்.

நீங்கள் உங்கள் துணையுடன் கடுமையாக நடந்து கொள்வீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை கெடுக்கும். உறவில் மகிழ்ச்சியை தக்க வைக்க அமைதியாக நடந்து கொள்ள வேண்டும்.

நிதிநிலைமை ஏமாற்றம் அளிக்கும் வகையில் இருக்கும். குடும்பத்திற்காக தேவையற்ற விஷயங்களுக்கு செலவு செய்ய நேரலாம்.

சில அசௌகரியங்கள் காரணமாக உங்கள் ஆரோக்கியம் பாதிக்கப்படும். கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.



கன்னி

இன்று வருத்தப்படும்படியான சில சூழ்நிலை காணப்படும். நீங்கள் எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காது. எளிய அணுகுமுறை மேற்கொள்வதன் மூலம் சாதகமான பலன்கள் கிடைக்கும்.

கூடுதல் பொறுப்புகள் காரணமாக பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பதை கடினமாக உணர்வீர்கள். விரும்பிய இலக்குகளை அடைவதற்கு திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக கருத்து வேறுபாடு ஏறபட்டு உங்கள் துணையுடன் சூடான விவாதத்தில் கலந்து கொள்வீர்கள்.இத்தகைய போக்கிற்கு இடம் கொடுக்காமல் இருக்க முயலுங்கள்.

உங்கள் குழந்தையின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் காணப்படும். இதனால் சேமிப்பதற்கான வாய்ப்பு குறைவாக இருக்கும்.



துலாம்

உங்கள் முயற்சியில் பொறுமையும் உறுதியும் தேவை. உங்கள் முயற்சில் வெற்றி காண உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும். உங்கள் பணிகளை திட்டமிட்டு நடத்த வேண்டும்.

இன்று கூடுதல் பணிகள் காணப்படும். சக ஊழியர்களின் கடுமையான நிலைப்பாட்டின் காரண-மாக நீங்கள் உணர்ச்சிவசப்பட நேரலாம்.

நீங்கள் குழப்பமான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். நீங்கள் இதனை தவிர்த்து அமைதியுடனும் கட்டுப்பாட்டுடனும் இருக்க வேண்டும்.

பணப்புழக்கம் இன்று சுமூகமாக இருக்காது. தேவையற்ற செலவுகள் செய்வீர்கள். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

இன்று ஆற்றலும் ஆரோக்கியமும் குறைந்து காணப்படும். தொண்டை வலி ஏற்பட வாய்ப்புள்ளது.



விருச்சிகம்

சுய வளர்ச்சிக்கான முயற்சிகளுக்கு இன்று சாதகமான நாள். உங்கள் மன உறுதி மூலம் இன்று உங்கள் விருப்பங்களை பூர்த்தி செய்து கொள்வீர்கள். நீங்கள் எடுக்கும் முயற்சிகள் நல்ல பலனளிக்கும்.

பணியில் உங்கள் செயல்திறன் உங்களுக்கு திருப்திகரமாக இருக்கலாம். குறித்தநேரத்தில் பணிகளை முடிப்பதற்கான சாத்தியம் உள்ளது.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பராமரிப்பீர்கள். உங்கள் துணையின் விருப்பப்படி நடந்து கொள்ள நேரலாம்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். பணத்தை சிறப்பாக சேமிப்பீர்கள். இதனால் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 24.11.2024




இன்றைய நிகழ்வுகளில் நீங்கள் நடைமுறை அணுகுமுறையை மேற்கொள்ள வேண்டும். உணர்ச்சி வசப்படுவதை தவிர்க்க வேண்டும். எதிர்மறை எண்ணங்கள் உங்களை பாதிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள். இன்று அமைதியாக இருங்கள்.

பணியிடச் சூழல் மகிழ்சிகரமாக இருக்காது. சக பணியாளர்களுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளதால் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசுங்கள். உங்கள் உணர்வுகளை ஒளிவு மறைவு இன்றி வெளிப்படுத்துவதன் மூலம் நல்லுறவு வளரும்.

இன்று கூடுதல் செலவுகள் காணப்படும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள நீங்கள் சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள்.




இன்று அர்த்தமுள்ள நாளாக இருக்காது. உங்கள் முயற்சிகள் வெற்றியை அளிக்காது. நீங்கள் அமைதியாகவும் நட்பான அணுகுமுறையுடனும் இருக்க வேண்டும். ஆன்மீக ஈடுபாடு ஆறுதலை பெற்றுத் தரும்.

பணியிடச் சூழல் சாதகமான பலன்களை அளிக்காது. பணிச்சுமை அதிகமாக காணப்படும்.

உங்களின் கடுமையான போக்கு காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை தக்க வைத்துக் கொள்வது கடினம். சகஜமான அணுகுமுறையால் நன்மை விளையும்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. இன்று கூடுதல் செலவுகள் செய்ய நேரலாம்.

பதட்டம் காரணமாக கால் வலி மற்றும் முதுகில் விறைப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று சில வலுவற்ற சூழ்நிலை காணப்படும். திட்டமிட்டு முயற்சி செய்தால் நல்ல பலன் கிடைக்கும். பிரார்த்தனை மற்றும் மந்திரங்கள் மூலம் நற்பயன் பெறலாம்.

பணியிடத்தில் நற்பலன்கள் காண உங்கள் பணியில் ஒழுங்கு முறையான அணுகுமுறை வேண்டும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு ஏற்பட வாய்ப்புள்ளது. இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும். உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

இன்று தேவையற்ற செலவுகள் காணப்படும். இதனால் சிறிது வருத்தம் உங்களிடம் காணப்படும்.

இன்று பதட்டம் காரணமாக தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது.




உங்களை மேம்படுத்திக் கொள்ள இன்றைய நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். உங்களின் இனிமையான தொடர்பின் மூலம் சாதகமான பலன்கள் சாத்தியம். இன்று உங்களுக்கு சிறப்பான நாள்.

பணியிடத்தில் உங்கள் செயல்திறன் சாதகமான பலன்களை அளிக்கும். பணி சம்பந்தமான பயணம் காணப்படுகின்றது.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகளால் உங்கள் துணை மகிழ்ச்சியுறுவார். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணப்புழக்கம் அதிக அளவில் காணப்படும். உங்கள் தேவைகள் சமாளிக்க நீங்கள் சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள்.






# அநுர அலைக்குள் அள்ளுண்ட தமிழ் மக்கள் சொல்லும் செய்தி!





புருஜோத்தமன் தங்கமயில்

'அநுர அலை'க்குள் தமிழ் மக்கள் அள்ளுண்டு போயிருக்கும் செய்தி, தமிழ்த் தேசியத் தரப்புக்களை பேசா மடந்தைகளாக்கியிருக்கின்றது. அதிக தருணங்களில் தமிழ்த் தேசிய அரசியலின் பெயரினால், அநேகரால் பேசப்படும் வார்த்தைகளுக்கும் அவர்களின் மூளைக்கும் இடையில் எந்தவித சம்பந்தமும் இருந்ததில்லை. கண்டதையெல்லாம் உளறிக் கொட்டி மக்களை மடையர்கள் என்று நினைத்து இயங்கியதன் விளைவை, தமிழ்த் தேசியக் கட்சிகள் இன்று எதிர்கொண்டு நிற்கின்றன. தமிழ்த் தேசிய அரசியல் அநுர அலையினால் தோற்றுப் போகவில்லை என்ற வாதம் அங்கொன்றும் இங்கொன்றுமாக எழுகின்றது. அதற்காக, தமிழ்த் தேசியக் கட்சிகள் என்று தங்களை முன்னிறுத்தும் கட்சிகள் பெற்ற வாக்குகளின் எண்ணிக்கையை முன்வைத்து, ஆசனங்களின் கணக்கு வழக்கு பார்க்கப்படுகின்றது. இது, தர்க்க ரீதியில் சரியான வாதம் போன்று தோன்றலாம். ஆனால், அதன் நடைமுறை யதார்த்தம் சார்ந்து நோக்கினால், அது அபத்தமானது. ஏனெனில், அநுர அலையை எதிர்கொள்வதற்கு தமிழ்த் தேசியக் கட்சிகள் எல்லாமும் ஓரணியாக திரண்டு நிற்பதுதான் சரி என்றால், 75 ஆண்டுகளைத் தாண்டிவிட்ட தமிழ்த் தேசிய அரசியல் நீட்சியில், இந்தக் கட்சிகளின் அடைவுதான் என்ன?

இந்தத் தேர்தலில் தமிழ்த் தேசியம் தோற்றுப் போயிருப்பதாக இந்தப் பத்தியாளர் ஒருபோதும் நம்பவில்லை. தமிழ்த் தேசியக் கட்சிகளின் செயற்பாட்டுத் திறனற்ற நடவடிக்கைகளினால், மக்கள் பெருமளவு நம்பிக்கை இழந்திருக்கிறார்கள் என்பதைத்தான் தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன. தென் இலங்கையின் பாரம்பரியக் கட்சிகள் எதுவும் இந்தத் தேர்தலில் வென்று ஆட்சி அமைக்கும் சாத்தியமில்லை என்ற முடிவை, ஜனாதிபதித் தேர்தலில் அநுர குமார திசாநாயக்க பெற்ற வெற்றி, தமிழ் மக்களிடமும் அறிவித்தது. அதனால்தான், யாழ்ப்பாணத்தில் இருபத்தி ஏழாயிரத்து சில்லறை வாக்குகளைப் பெற்ற தேசிய மக்கள் சக்தியினால், அடுத்த ஐம்பது நாட்களுக்குள் கிட்டத்தட்ட மூன்று மடங்காக வாக்குகளைப் பெற முடிந்திருக்கின்றது. அநுர அலைக்குள் தமிழ் மக்கள் அள்ளுண்டு போயிருப்பது, பாரிய எதிர்பார்ப்புக்களின் அடிப்படையில் அல்ல. மாறாக, தமிழ்த் தேசியக் கட்சிகள் மீதான அதிருப்திக்கான மாற்றுத் தெரிவு சார்ந்த பிரதிபலிப்பின் போக்கிலாகும். வடக்குக் கிழக்கில் தாங்கள் பெற்ற வெற்றியை, தேசிய மக்கள் சக்தியினர் ஒருபோதும் எதிர்பார்த்திருக்கவில்லை. அது, அவர்களுக்கும் ஆச்சரியமளித்திருக்கின்றது. இன்றைக்கு அவர்கள் நாடு முழுவதும் ஆணைபெற்று ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள். இதுவரை, ஆட்சிக்கு வந்த தென் இலங்கைத் தரப்புக்கள், வடக்குக் கிழக்கில் இவ்வாறான ஆணையை ஒருபோதும் பெற்றதில்லை. அது தொடர்பில் சிந்தித்ததுமில்லை. தேசிய மக்கள் சக்தி, எதிர்பார்க்காத வெற்றியை தமிழ் மக்களும் சேர்ந்து வழங்கியிருக்கும் நிலையில், அந்த வெற்றியை எதிர்காலத்தில் எப்படி தக்க வைத்துக் கொள்வது என்பது சார்ந்து, அவர்கள் திட்டமிட்டுச் செயற்படுவார்கள்.

தேசிய மக்கள் சக்தியின் உண்மை முகமான ஜே.வி.பி., அரசியல் செயற்பாட்டினை நிறுவன ரீதியில் திட்டமிட்டு முன்னெடுப்பது. அதற்கு குறுகிய வெற்றிகள் தொடர்பிலான அவசரம் இருப்பதில்லை. கிடைக்கும் வெற்றிகளை, எதிர்கால அடைவுகளுக்கான படிக்கற்களாக மாற்றும் உத்தி அறிந்த செயற்பாட்டு அரசியலின் சொந்தக்காரர்கள். இதுவரை தென் இலங்கையின் பாரம்பரிய சக்திகளை தோற்கடிப்பதில் கவனம் செலுத்திய ஜே.வி.பி.யினர், இனி தமிழ்த் தேசிய அரசியலின் பெயரினால் நிலைபெற்றுவிட்ட பாரம்பரிய அரசியல்வாதிகளையும் குடும்பங்களையும் இலக்கு வைத்து, அரசியலை நகர்த்துவார்கள். அது, தமிழ் மக்களிடம் எடுபடும் வாய்ப்புக்களும் உண்டு. ஏனெனில், தமிழ்த் தேசியப் போராட்டம் முழு மூச்சோடு முன்னெடுக்கப்பட்ட காலத்திற்கு பின்னராக வளர்த்துவிட்ட இளைஞர்கள் கூட்டம் ஒன்று உருவாகிவிட்டது. அவர்களுக்கும் தமிழ்த் தேசியக் கட்சிகள் செய்யும் அரசியலுக்கும் இடையிலான இடைவெளி நிரப்ப முடியாத அளவுக்கு இருக்கின்றது. அந்த இடைவெளியை, தேசிய மக்கள் சக்தியினர் இலகுவாகவும் கவர்ச்சிகரமாகவும் நிரப்பிக் கொண்டிருக்கிறார்கள். ரிக்ரொக், றீல்ஸ் உள்ளிட்ட காணொலி தளங்களில், அநுர அலையை கொண்டாடும் நூற்றுக்கணக்கான தமிழ்க் காணொலிகள் நாளும் பொழுதும் பதியப்படுகின்றன. இலகுவாக, "யார்ரா அந்தப் பையன்... நான் தாண்டா அந்தப் பையன்.." மாதிரியான ரெண்ட் காணொலிகளை

தொடர்ச்சி▼

# அநுர அலைக்குள் அள்ளுண்ட தமிழ் மக்கள் சொல்லும் செய்தி!



தொடர்ச்சி▲

அநுரவும், அவரின் இளவல்களும் நிரப்பிக் கொண்டிருக்கிறார்கள். திருகோணமலையின் அருண் ஹேமச்சந்திரவும், இரத்தினபுரியின் பிரதீப்பும், யாழ்ப்பாணத்தின் இளங்குமரனும், பதுளையின் அம்பிகாவும் தமிழ் இளைஞர்களிடம் பெரும் நாயக பிம்பத்தோடு முன்வைக்கப்படுகிறார்கள். அரசியல் அதிகார ஆர்வத்தோடு இருப்பவர்களை ஈர்ப்பதற்கான வழிமுறைகளில் அது பெரு வெற்றியை ஜே.வி.பி.யினருக்கு பெற்றும் கொடுக்கும்.

சமூக ஊடக வெளிச்சத்தில் பெரு வெற்றி பெற்ற வாழும் உதாரணத்தை, யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டமும் இம்முறை பிரசவித்திருக்கின்றது. மருத்துவர் அர்ச்சுனாவுக்கு விழுந்த சுமார் 28,000 வாக்குகளில் இளைஞர்களின் வாக்குகளே அதிகமானவை. அர்ச்சுனாவும், அவரது ஆதரவுத் தரப்பினரும் கடந்த சில மாதங்களாக சமூக ஊடகங்களை நாளும் பொழுதும் ஆக்கிரமித்துக் கொண்டார்கள். முடிவுறாத சர்ச்சையைக் கிளப்பினார்கள். தமிழர் அரசியலில் அர்ச்சுனாவைத் தவிர பேசுவதற்கு ஒன்றுமில்லை என்ற அளவுக்கு விடயம் ஊதிப் பெருப்பிக்கப்பட்டது. அது, சாமானியர்களின் அலைபேசிகள் வரை வியாபித்தது. அதுதான், இன்றைக்கு அர்ச்சுனாவை ‘கௌரவ’ நாடாளுமன்ற உறுப்பினராக மாற்றியிருக்கின்றது. அவர், வெற்றியை பெற்ற பின்னரும், சர்ச்சையின் நாயகனாக இருப்பதற்கான எல்லாக் காரியங்களையும் ஆற்றிக் கொண்டிருக்கிறார். அதன் வழியாக அவரைக் கொண்டாடுவதற்கு ஒரு பெருங்கூட்டம் தயாராக இருக்கின்றது என்ற செய்தி, மீண்டும் மீண்டும் சொல்லப்படுகின்றது. தனியொரு அர்ச்சுனாவால், இவ்வளவு கவனம் பெற முடியும் என்றால், பிரச்சார உத்திகளின் தலைமகன்களாக இலங்கை அரசியல் களத்தில், இருக்கும் ஜே.வி.பி.காரர்களினால், தமிழ் சமூக ஊடக வெளியை இலகுவாகவும், தொய்வின்றியும் ஆக்கிரமித்துக் கொள்ள முடியும். அது, இன்றைய வாக்காளர்களை மட்டுமல்ல, நாளை புதிய வாக்காளர்களாக மாறப்போகும் பதின்ம வயதினர் வரை தாக்கம் செலுத்தும்.

இன்றைக்கு சமூக ஊடகங்களில் தமிழ்த் தேசிய அரசியல் பேசும் இளைஞர்களை இலகுவாக அடையாளம் கண்டு கொள்ளலாம். இப்போது இவர்களின் அநேகர் நாற்பதுகளை அடைந்து கொண்டிருப்பவர்கள். குறிப்பாக, முள்ளிவாய்க்கால் முடிவுகளின் கனதியை நேரடியாக சந்தித்தவர்கள் அல்லது அதனை பார்த்து மனம் வெதுப்பிய இளைஞர்களின் நீட்சி இந்தக் கூட்டம். அடுத்த பொதுத் தேர்தலுக்கு அவர்களில் அநேகர் நாற்பதுகளைக் கடந்து விடுவார்கள். ஆனால், தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் இருபதுகளிலும் முப்பதுகளிலும் இருக்கப் போகிறவர்கள், முள்ளிவாய்க்கால் முடிவுகள், தமிழ்த் தேசிய அரசியலின் தேவை தொடர்பில் பெரிய பட்டறிவு இன்றி வளர்ந்துவிட்ட ஒரு பெரும் கூட்டமாகும். இன்றைக்கு சமூக ஊடகங்களில் அரசியல் பேசும் தமிழ் இளைஞர்களில், யார் யார் எந்தக் கட்சியின் ஆதரவாளர், யாரின் விமர்சகர்கள் என்பது வரையில் தெளிவான உணர்நிலை உண்டு. இவர்களின் அரசியல் அணுகுமுறை என்பது, தங்களுக்குள் சண்டையிட்டு ஓய்வதோடு முடிந்துவிடும். இந்தப் பொதுத் தேர்தலுக்கு முன்னர் வரையில், மாறி மாறி அடித்துக் கொண்ட இவர்களுக்கு, களம் அநுர அலைக்குள் அள்ளுண்டு செல்கின்றது என்பதை கணிக்க முடியவில்லை என்பது பெரும் சோகமாகும். இந்த வட்டத்துக்குள் புலமையாளர்கள், சட்டத்தரணிகள் தொடங்கி யாழ்ப்பாணத்தின் படித்த சமூகம் என்று தங்களை முன்னிறுத்தும் ஒரு பெரும் தொகுதியினர் அடங்கியிருந்தனர். அவர்களில் அநேகர், தமிழ்த் தேசியக் கட்சிகளில் மதியுரைஞர்களாகவும் செயற்பட்டவர்கள். ஆனால், இன்றைக்கு, தங்களுக்குள் முட்டி மோதி, கள நிலைமைகளை அறியாத பழியைச் சுமந்து நிற்கிறார்கள். தேர்தலுக்கு ஒரு சில நாள்களுக்கு முன்னர் வரையில் தங்களுக்குள் பழித்தும் சிரித்தும்விட்டு இறுதி நாள்களில் தமிழ்த் தேசியத்துக்கு வாக்களிக்கக் கோரிய போது, அநுர அலைக்குள் தமிழ் மக்களின் அநேகர் அள்ளுண்டு போயிருந்தார்கள். அதிலும் அரச உத்தியோகஸ்தர்கள் பெருமளவில் அநுர அலைக்குள் அடங்கிவிட்டு, சமூக ஊடகங்களில் தமிழ்த் தேசிய வகுப்பு எடுத்த காட்சிகள் எல்லாமும் அரங்கேறியது. இன்றைக்கு, தமிழ்த் தேசிய அரசியலை சமூக ஊடகங்களில் பேசும் இளைஞர்கள் தரப்பு, ஆமைகள் போல தலைகளை உள்ளுக்குள் இழுத்துக் கொண்டுவிட்டார்கள். அவர்களுக்கு, இந்தப் பின்னடைவை, எப்படிக் கடப்பது என்று தெரியவில்லை.பேஸ்புக், எக்ஸ் தளங்களைத் தாண்டி இன்றைக்கு கவர்ச்சிகரமான கவனம்பெற்ற ஊடகங்களாக ரிக்ரொக்கும் றீல்ஸ்சும் மாறிவிட்டன. அதில், இயங்கும் இளைஞர்கள் தொடர்பில் ஒருவகையினால் கீழ்த்தரமான எண்ணங்களை வெளிப்

தொடர்ச்சி▼

# அநுர அலைக்குள் அள்ளுண்ட தமிழ் மக்கள் சொல்லும் செய்தி!

தொடர்ச்சி▲

படுத்திய, மேடிமைத்தனத்துக்கும் சேர்த்துத்தான் அநுர அலையில் ஆக்கிரமிப்பு பெரும் படிப்பினையை வழங்கியிருக்கின்றது. ஏனெனில், ரிக்ரொக் போன்ற தளங்களில் கவனக் கலைப்பான்களாக இருந்தவர்களில் சிலர், தேசிய மக்கள் சக்திக்காக கிராமங்களில் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தமையையும் காண முடிந்தது. பிரதான ஊடகங்களின் தாக்கம் இல்லாத பகுதிகளிலும் இந்த காணொலி ஊடகங்களின் வீச்சு அதிகம். அப்படியான கட்டத்தில், அதில் கவனம் பெற்றவர்கள் ஒவ்வொரு கிராமங்களிலும் கவர்ச்சிகரமானர்களாக மாறுவார்கள். அவர்கள், நேரடியாக பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடும் போது, காசுக்கும் சலுகைகளுக்கும் வாக்குக் கேட்டுச் செல்லும் பிரச்சாரகர்களைத் தாண்டி, இந்த சிறு காணொலி நாயகர்கள் இலகுவாக கவனம் பெறுவார்கள்.



தேசிய மக்கள் சக்திக்கான வாக்களிப்பை தொகுதி வாரியாக எடுத்து நோக்கி ஆய்ந்து அறிந்தால், அது வெளிப்படுத்தும் உண்மைகளைப் புரிந்து கொள்ளலாம்.

தமிழ்த் தேசியக் கட்சிகள் தோல்வியின் பின்னரும் தங்களில் பாரம்பரிய அரசியல் அணுகுமுறையை மாற்றுவதுபோல தெரியவில்லை. தமிழரசுக் கட்சி தன்னுடைய தேசியப் பட்டியல் ஆசனத்துக்கு, தலைவர் பதவியில் இருந்து விலகினாரா, இல்லையா என்று தெரியாத மாவை சேனாதிராஜாவின் பெயரை பரிசீலிக்கும் அளவுக்கு இருக்கின்றது. அவரும், எந்தவித பொறுப்புணர்வும் இல்லாமல், தனக்கு பதவியை வழங்கக் கோரி கெஞ்சிக் கொண்டிருந்தார். இன்னொரு பக்கம், புதிய இளைஞர் ஒருவருக்கு பதவியை வழங்கி, கட்சி மீது நம்பிக்கை இழந்திருக்கின்ற இளைஞர்களிடம் நற்செய்தியை சொல்வதற்குப் பதிலாக தொடர்ச்சியாக இரண்டு தேர்தல்களில் தோல்வியடைந்த மருத்துவர் பா.சத்தியலிங்கத்திடம் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வழங்கியிருக்கிறார்கள். அவர், வன்னித் தேர்தல் மாவட்டத்தில் விருப்பு வாக்கின் அடிப்படையிலும் ஐந்தாவது இடத்தில் நிற்பவர். அவரைவிட சக வேட்பாளர்களான டினேசன், டலீமா போன்றவர்கள் அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றவர்கள். இப்படியாக, தேய்ந்துபோன பாரம்பரிய அரசியல்வாதிகளாக தமிழரசுக் கட்சியினர் தொடர்ந்தும் செயற்பட்டால், வடக்கில் அடைந்த படுதோல்வியின் விளைவுகளை கிழக்கிலும் பெற வேண்டி வரலாம். தமிழரசுக் கட்சியின் மீட்சியை நடத்தியது கிழக்கு. அதில், மட்டக்களப்பில் சாணக்கியனின் வகிபாகம் முதன்மையானது. அவர், நம்பிக்கையளிக்கும் இளைஞராக தமிழர் அரசியலில் மாறியிருக்கிறார். அவரும் இல்லையென்றால், மட்டக்களப்பிலும் ஓர் ஆசனத்துக்குள் தமிழரசு சுருங்கியிருக்கும். இறுதியாக அனைத்துத் தேர்தல் மாவட்டங்களிலும் ஒவ்வொரு ஆசனங்களைப் பெற்ற அளவில் கட்சி மாறியிருக்கும்.

மற்றப் பக்கத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முகத்தோடு இருக்கும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தன்னுடைய தோல்விகரமான அரசியலை கைவிடுவதாக இல்லை. ஒரு விடயம் முன்னெடுக்கப்படுவதற்கு முன்னரேயே, எதிர்ப்புத்தான் அரசியல் வழி என்று அறைகூவுவது அவர்களை மக்கள் தொடர்ச்சியாக புறக்கணிப்பதற்கான காரணியாகும். காங்கிரஸினால், யாழ்ப்பாணத்தைத் தாண்டிச் செல்ல முடியவில்லை. கிழக்கில், அந்தக் கட்சி ஒரு வீதத்திற்கும் குறைவான வாக்குகளைப் பெற்றிருக்கின்றது. யாழ் நிர்வாக மாவட்டத்தில் காங்கிரஸ்/க்கு விழும் வாக்குகளில் அதிகமானவை, பாரம்பரிய ஜீ.ஜீ.பொன்னம்பலத்து காலத்து வாக்குகள். அந்த வாக்குகள் அடுத்த இரண்டு தேர்தல்களில் தாக்குப் பிடிக்கவே போதுமானதாக இருக்காது. எஞ்சியுள்ளது சில நூறு இளைஞர்களின் வாக்குகள். அந்த எண்ணிக்கை, இன்றைக்கு இருக்கும் நிலையில் தப்பிப்பிழைப்பது எவ்வளவு தூரம் சாத்தியம் என்று தெரியவில்லை. அத்தோடு, இனி காங்கிரஸினை ஒரு அரசியல் எதிரியாக காட்டும் வேலைகளை தமிழரசு யாழ்ப்பாணத்துக்குள் செய்யும் வாய்ப்புக்கள் இல்லை. ஏனெனில், தமிழரசு தன்னை தேசிய மக்கள் சக்திக்கு எதிராக நிலை நிறுத்தியாக வேண்டும். இல்லையென்றால், தமிழரசு தன்னுடைய வாக்குகளை இழக்க வேண்டி வரலாம். அதனால், காங்கிரஸின் நிலை இன்னும் இன்னும் கீழிறக்கப்படும்.

தமிழ்த் தேசிய அரசியல் பேசும் கட்சிகள் தங்களின் பாரம்பரிய நிறுவனக் கட்டமைப்பு மற்றும் குடும்ப, சாதி ஆதிக்க அரசியலைக் கைவிட்டு இளைஞர்களையும் பாதிக்கப்பட்ட சமூகங்களையும் நோக்கி செயற்பாட்டு அரசியல் செய்வதற்கு முழு மனதோடு தயாராக வேண்டும். இன்று அநுர அலைக்குள் அள்ளுண்டு சென்றிருக்கின்ற மக்கள், தமிழ்த் தேசியக் கட்சிகளை நோக்கி ஓர் எச்சரிக்கையை விடுத்திருக்கிறார்கள். அதனை உணராமல், திரும்பத் திரும்ப அறமற்ற அழிச்சாட்டியங்களின் வழியாக விடயங்களைக் கடப்பீர்கள் என்றால், தேசிய மக்கள் சக்தி ஒவ்வொரு கிராமங்களுக்குள்ளும் ஊடுருவி, ஆழ வேரூன்றிக் கொள்ளும். அப்போது, குய்யோ முறையோ என்று கத்திக் குழறினாலும் அதனால் ஆகப்போவது ஒன்றுமில்லை. முதலில், அதனை உணர்ந்து இளைஞர்களிடம் அரசியலை ஒப்படைத்து செயற்பாட்டு அரசியலை அடுத்த கட்டத்துக்க நகர்த்துங்கள். இப்போதைக்கு அவசரமாக சொல்லிக் கொள்ளக் கூடியது அதுதான்.

# மன்னார் வைத்தியசாலையும் மருத்துவத் தவறுகளும்...!




வி.எஸ்.சிவகரன்

விஞ்ஞானத்தின் அசுர வளர்ச்சி கடவுள் இருக்கிறாரா என்கின்ற கேள்வியை எழுப்பு அளவுக்கு விரிந்து விட்டது. மனிதர்கள் எண்ணத்துக்கு அப்பாற்பட்டு தொழில்நுட்பம் மனிதனை ஆள்கொண்டு இருக்கிறது. அதில், விரும்பியோ விரும்பாமலோ இணைந்துதான் ஆக வேண்டும் என்கின்ற விதியும் ஏற்பட்டு விட்டது.

ஏனெனில், உலகியலினுடைய நடப்பு விவகாரங்கள் யாவும் ஒரு சிஸ்டத்துக்குள் உள்ளீர்க்கப்பட்டுள்ளன. அதனால் அதற்கு நாம் இணங்கிப்போக வேண்டிய நிர்ப்பந்தம் எம் மீது இயல்பாகவே திணிக்கப்பட்டுள்ளது.

அதிலும் மருத்துவத்துறை என்பது நாளுக்கு நாள் உச்சம் தொடுகின்ற அளவுக்கு புதிய சிகிச்சை முறைகளும் அதற்குரிய தீர்வுகளும் என வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால் மூன்றாம் மண்டல நாடுகளில் இந்த வசதிகள் என்பன மிகக் குறைவாகவே இருக்கின்றன.

இன்று உலக வணிகத்தில் முதல் நிலையில் இருப்பது மருத்துவம் என்பதனால் மனிதாபிமானம் கடந்து பணத்துக்குப் பணி செய்யும் நிலைக்கு நிர்பந்திக்கப்படுகிறது சமூகக் கட்டமைப்பு. ஒரு வருமானம் தேடும் தொழிலாகவே அந்தத் துறையை பலர் தேர்ந்தெடுக்கிறார்கள். அதில் பலர் மனிதநேயமின்றி இயந்திரங்கள் போல் செயலாற்றுகிறார்கள். அங்குதான் மனிதத்துக்கான கேள்வி எழுகிறது. மனிதாபிமான இருப்புக்கான நோக்கமும் காணாமல் போகிறது. அந்த நிலை ஏற்படுகிற போது சந்தர்ப்பவாதமும், சமயோசிதம் கடந்த பணரீதியான அணுகுமுறையும் மேலோங்குவதால் அறம் மரத்துப் போகிறது.

இலங்கையைப் பொறுத்தவரையில் வைத்தியர்கள் மிகவும் குறைந்த அளவிலே இருக்கின்றமையால் அவர்களுக்குரிய கேள்வி அதிகமாகவே காணப்படுகிறது. அதுவும் வைத்திய நிபுணர்களின் எண்ணிக்கை குறைந்த அளவில் உள்ளதே பிரதான காரணம். பணம் இருந்தாலும் கூட சில வைத்தியர்களை அணுக முடியாத நிலை காணப்படுகிறது. இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கமும் தங்களுக்குள் தாங்களே வானளாவிய அதிகாரத்தை குவித்து வைத்துள்ளனர். அதனால் அவர்கள் தாங்கள் நினைப்பதையே செய்வது உண்டு. இடமாற்றம் உட்பட சகல நகர்வுகளையும் அவர்களே தங்களுக்குள் தீர்மானித்துக் கொள்கிறார்கள்.

சுகாதார அமைச்சருக்கோ, ஜனாதிபதிக்குக் கூட இவர்களுடைய சங்கத்தை கட்டுப்படுத்தும் அதிகாரம் இருப்பதில்லை. தங்கள் தவறுகளை இவர்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்வதும் இல்லை. இவர்கள் மட்டுமின்றி, சட்டத்தரணிகள், பொறியியலாளர்களிலும் இவ்விதமான ஒரு மிக மோசமான அணுகுமுறை உண்டு. மரணம் எல்லாவற்றுக்கும் ஏதோ ஒரு காரணமுண்டு. காரணம் இல்லாமல் எதுவும் நிகழ்வதில்லை என்பது இயற்கையினுடைய இயங்கியல் கோட்பாடு. அந்த கோட்பாட்டின் அடிப்படையில் இவ்விதமானவர்கள் காரண காரியத்தை வலிந்து கண்டுபிடித்து, அதற்குப் புதிய புதிய வியாக்கியானங்களை வழங்கி, தொழில்நுட்ப ரீதியான விளக்கங்களையும் கூறி, சாமானிய மக்களை தொடர்ந்து ஏமாற்றி வருகிறார்கள். படித்தவர்கள் எனக் கூறப்படுபவர்கள் பலர் எப்படி மக்களை ஏமாற்றலாம், அதில் எப்படி தாங்கள் பணம் சேர்த்துக் கொள்ளலாம், சரியாகச் செய்யாமல் இருப்பதற்கு எப்படிக் காரணத்தைக் கண்டுபிடிக்கலாம், அந்தக் காரணத்தை தமக்கு ஏற்றால் போல் எப்படி மாற்றிக் கொள்ளலாம் என்பவற்றுக்காகவேதான் இவர்களில் பலர் தங்களுடைய அறிவைப் பயன்படுத்துகிறார்கள் என்பது நிதர்சனமான உண்மை.

வெளிப்படைத் தன்மையற்ற தந்திரமான அணுகுமுறை – இந்த அணுகு முறையை பின்பற்றுவதால்தான் பல உண்மைகள் காணாமலே போய்விடுகின்றன. மக்களும் சமூக சமநீதியில் நம்பிக்கை அற்றவர்களாகப் போய்விட்டார்கள். பின்னடைவுகளுக்கும் இழப்புக்களுக்கும் காரணத்தை கண்டுபிடிப்பவர்கள் பலர் அதனை முன்னேற்றுவதற்குரிய வழிக்கான தடைகளை விலக்கக்கூடிய வழிவகை என்ன என்பதற்குரிய காரணத்தைக் கண்டுபிடிப்பது இல்லை. தங்களுக்கு சாதகமாக வல்லோரால் வகுக்கப்பட்ட நியதிகளை கவசமாக

தொடர்ச்சி ▼



# மன்னார் வைத்தியசாலையும் மருத்துவத் தவறுகளும்...!

**தொடர்ச்சி▲**

அணிந்து கொண்டு, தம்மை தற்காத்துக் கொள்கிறார்கள். அதனால் தான் இன்னும் சமூக மாற்றமோ, ஏற்றமோ, சமூக விடுதலையோ, மனித விடுதலையோ இல்லாமல் தொடர்ந்து பின்னடைவுகளையும் தோல்வியையும் சந்திக்கின்ற சமூகமாக மனிதவர்க்கம் சோர்ந்து போயிருக்கிறது.

மன்னார் வைத்திய சாலையில் வைத்தியத் தவறுகளால் மரணங்கள் நிகழ்கின்றன எனும் வாதம் பல சந்தர்ப்பங்களில் நடந்தேறி உள்ளது. சில விடயங்கள் விசாரணைக்குள் முடங்கி கிடக்கின்றன. பல விடயங்கள் அப்படியே காணாமல் போய்விட்டன.

உயர்ந்த பட்ச மனித நேயம் உள்ள துறையில், அந்த மனிதர்களினுடைய உணர்வுகளைப் புரிந்து கொண்டு செயலாற்ற முடியவில்லை என்றால் இவ்விதமான துறையை அவர்கள் தெரிவு செய்திருக்கக் கூடாது. அரச வைத்தியசாலைகளில் நோயாளர்களை பலர் மனிதர்களாகவே மதிப்பது இல்லை . அங்கு தான் அடிப்படை வாதம் தோற்றம் பெறுகிறது.

சில மாதங்களுக்கு முன்னர் சிந்துஜா என்ற இளம் தாய் இறந்து போனார். தற்பொழுது வனஜா என்கின்ற இளம் தாயும் சேயும் இறந்து போய் உள்ளனர். இறப்புக்கு பின்னர் மருத்துவத்துறை எவ்விதமான காரணத்தை கூறிக் கொண்டாலும் கூட அந்த தாய்க்கு அவ்விதமான நிலைமை ஏற்படும் வரைக்கும் இந்த மருத்துவ அதிகாரிகள், மருத்துவ பணியாளர்கள் அக்கறை செலுத்துவ்திலிருந்து கவனக்குறைவாக இருந்து விட்டார்களோ என்கின்ற கேள்விதான் இங்கு முதன்மையாகின்றது. நிகழ்ந்ததற்கு பின்னர் காரணத்தைக் கண்டுபிடிப்பது இலகுவானது. நிகழாமையினைத் தடுப்பதே நிகழ்த்தகவின் முன்னுணர்வு. அதற்குத் தான் உணர்திறன் கல்வியை ஒ படித்தது மட்டுமல்ல, அதற்குரிய கருவிகள் துணையுடனும் அறிந்து கொள்ளக் கூடிய வசதியும் தெளிவும் வைத்தியத்துறைக்கு உண்டு என சாமானிய மக்கள் நம்புகிறார்கள். அந்த நம்பிக்கையை இவர்கள் வீணடிக்கிறார்கள்.

ஏழு ஆண்டுகளுக்கு மேல் குழந்தை இல்லாத அந்த இளம் தாய் மூன்றரை கிலோக்கு மேல் உள்ள நிறையுடைய குழந்தையை இயல்பாக பெற்றெடுக்கக்கூடிய நிலை உண்டா என்பதனை பொறுப்பாக இருந்த மருத்துவர் தீர்மானித்திருக்க வேண்டும். குறித்த மருத்துவர் உடலியல் ரீதியாக மிகவும் பாதிக்கப்பட்ட ஒரு நோயாளியாக இருப்பதனால் இந்த விடயங்களை அவர் சரியாகக் கவனம் செலுத்தவில்லையோ என்கின்ற கேள்வியும் இப்பொழுது எழுகிறது.

அவ்வாறான ஒரு முதிர்ந்த நோயாளியை இந்த மருத்துவத் துறையில் பணி செய்வதற்கு எப்படி நிர்வாகம் இவ்வளவு காலமும் அனுமதித்தது? இவர்களை நம்பி மகப்பேற்றுக்குப் போனதுதான் தவறாகியதா? இதற்குப் பொறுப்பு கூறுவது யார்? இப்பொழுது இறப்புக்கான காரணத்தை கூறி தப்பித்துக் கொள்ள முனையலாம். மருத்துவத்துறை அதற்கு முந்திய நிலையில் இவர்கள் தீர்மானம் எடுக்க தவறியதின் விளைவே அந்தப் பெண்ணுக்கு இவ்விதமான நிலை நடந்தது என்பதனை மருத்துவத்துறை பொறுப்பு கூறுமா? அதற்குரிய வாய்ப்பு மிகவும் குறைவு. அவர்களைப் பொறுத்தவரை மரணம் என்பது எண்ணிக்கையில் ஒன்று கூடியது. ஆனால் அந்தக் குடும்பத்துக்கு மட்டுமே அதனுடைய வலி உயிருள்ளவரை தொடரும்.

தினந்தோறும் இவ்வாறான பொறுப்பற்ற செயற்பாடுகள் நடந்தேறியே வருகின்றன. படித்தவர்கள் என கூறிக் கொள்பவர்கள், அசைக்க முடியாத தொழிற்சங்கம் எமக்கு இருகிறது என்கின்ற அசராத நம்பிக்கையில் திளைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால் அவர்களிடம் பொறுப்பு கூறலோ, பகிர்ந்து கொள்ளலோ, பொறுப்பேற்றலோ என்பவெள கிஞ்சித்தும் எதிர்பார்க்க முடியாதவை.

மருத்துவர்கள் நிர்வாக நடைமுறைக்கு மாறாகத் தாங்கள் வகுத்த விதியில் செயலாற்றுகிறார்கள். மாதத்தில் இரண்டு வாரங்கள் மட்டுமே வைத்தியசாலைகளில் பணி செய்கிறார்கள். மீதி இரண்டு வாரமும் வீடுகளில் இருக்கிறார்கள். அந்த இரண்டு வாரத்துக்கு உரிய கொடுப்பனவையும் மேலதிக கொடுப்பனவையும் கூட பெற்றுக் கொள்கிறார்கள். இதனை சுகாதாரத் துறை கண்டு கொள்வது இல்லை. இந்தத் துறைக்கு உள்ளக ரீதியான ஆய்வுகளும் இடம் பெறுவது இல்லை. இந்த எழுதப்படாத விதி உடனடியாக மாற்றப்பட வேண்டும். அது மாற்றப்பட்டால் பல வைத்தியசாலைகளில் மருத்துவத் துறை மீதான குற்றச்சாட்டுகள் குறையத் தொடங்கி விடும்.

மக்களின் வரிப்பணத்தை வேலை செய்யாமலே வேலை செய்வதாகக் காட்டி எப்படி வீணடிக்கிறார்கள்? வனஜாவினுடைய மரணமும் பன்னீர் குடம் உடைத்ததனால், அதன் கழிவுகள் குருதிச் சுற்றோட்டத்தில் கலந்ததால் அவர் இறந்து போயிருக்கிறார் என்கின்ற தகவல் இப்பொழுது கூறப்படுகிறது. இது சில ஆயிரம் பேருக்குள் நிகழக்கூடியது என்றும் மருத்துவத்துறை வியாக்கியானம் கூறுகிறது. இதைச் சொல்வதற்கு ஒரு வைத்திய நிபுணர் தேவையில்லை. 24 மணி நேரத்துக்கு முன்னரே விடுதியில் அனுமதிக்கப்பட்ட ஒருவரினுடைய உடல் நிலையை சரியாக பரிசோதிக்கத் தவறியது யாருடைய தவறு? இதற்கு இந்த மருத்துவத்துறையிடம் பதில் இல்லை. இயற்கை நீதிக் கோட்பாட்டின் அடிப்படையில் அறம் இல்லாத எந்தச் செயலுக்கும் எதிர் விளைவு நிச்சயம் உண்டு என்பதை இந்த அறிவாளிகள் என சொல்லப்படுபவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். மருத்துவத் துறையும் தனது மேலாதிக்க எண்ணத்திலிருந்து விடுபட்டு நோயாளியின் நலன் நோக்கு விடயத்தில் தூய எண்ணத்தோடு சிரத்தையுடன் அக்கறை செலுத்த வேண்டும். இல்லையேல் இந்தத் துறையைத் தேர்வு செய்தமை அர்த்தமற்றதாகிப் போய்விடும். மருத்துவ மாபியாக்கள் என முன் வைக்கும் குற்றச்சாட்டுகள் உண்மை என்கின்ற அளவுக்கு எண்ணத் தோன்றிவிடும். இந்த மருத்துவத் துறையை மக்கள் மயப்படுத்தப்பட்ட நிலைக்கு இட்டுச் செல்ல வேண்டும் என்றால் வைத்தியர்களின் எண்ணிக்கை அதிகரித்து, கேள்வியைக் குறைப்பதை தவிர வேறு வழியில்லை. இவர்கள் தாங்களாக மாறாத வரை மாற்றம் என்பது மருத்துவத்துறையில் ஒருபோதும் நிகழப்போவதில்லை.

தொடர்ந்தும் சிந்துஜாக்களுக்கும் வனஜாக்களுக்கும் இந்த நிலைதான் ஏற்படப் போகின்றதா?